# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 08 திங்கட்கிழமை (20.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :85


## புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடி கடற்படையினர் ஆழ்கடலில் தேடுதல்

கொழும்பு, பெப்.20

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கையை நோக்கி வந்து கொண்டிருப்பதாக ஸ்ரீலங்காவின் நட்பு நாடு ஒன்றின் புலனாய்வு அமைப்பு ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை உசார்படுத்தி உள்ளது. இதையடுத்து தேடுதல்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா நட்பு நாட்டின் கண்காணிப்பு விமானம் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு தெற்கே சுமார் 200 கடல் மைல் தொலைவில் மர்மக்கப்பல் ஒன்றை அவதானித்ததாகவும் இதுகுறித்து உடனடியாக ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து ஸ்ரீலங்கா கடற்படையின் பெருந்தொகையான கடற்கலங்கள் இத்தேடுதலில் இறங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

ஜெனீவாப் பேச்சுக்குழுவில் அரசு தரப்பில் கலந்துகொள்பவரும் ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவின் உத்தரவின் பேரில் இந்தத் தேடுதல் நடைபெற்றுவருவதாகவும் தெரியவந்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே
### கல்விச்சுடர்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.(உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி வெளியாகும் மாதிரி வினாத்தாள்கள் வரிசையில் கணக்கீடு வினாக்கள் இன்று பிரசுரமாகின்றன.

நாளைய கல்விச் சுடரில் தமிழ் மொழி, பொருளியல் ஆகிய பாடங்களின் மாதிரி வினாத்தாள்கள் வெளியாகும்.

# யுத்தநிறுத்த உடன்பாட்டை திருத்தும் பேச்சுக்கே அடியோடு இடமில்லை!

## புலிகள் திட்டவட்டம்; பாலா விசேட செவ்வி



லண்டன், பெப்ரவரி20-

"ஜெனீவாவில் பேச்சுகளின்போது யுத்தநிறுத்த உடன்பாட்டைத் திருத்துதல் என்ற விவகாரத்துக்கு இடமேயில்லை"

இவ்வாறு புலிகளின் திட்டவட்டமான நிலைப்பாட்டை உறுதிபட தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத்தலைவரும், புலிகள் இயக்கத்தின் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம்.

ஜெனீவாவில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுகள் நாளை மறுதினமும் அடுத்த நாளும் நடைபெறவுள்ளன. அப்பேச்சுகளில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு ஏற்கனவே ஜெனீவா சென்றுள்ளது.

அக்குழுவினருடன் இணைந்து கொள்வதற்காக லண்டனிலிருந்து மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும், துணைவியார் அடேல் பாலசிங்கமும் இன்று மாலை ஜெனீவா புறப்படுகின்றனர். அதற்கு முன்னர் நேற்று லண்டனில் உள்ள தமது இல்லத்தில் வைத்து 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களுக்கு தகவல் வெளியிட்டபோதே பாலா மேற்கண்டவாறு தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் கிளைமோர் மீட்பு

மன்னார் பேசாலை பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மூன்று கிளைமோர்க் குண்டுகளை நேற்று கடற்படையினர் கண்டெடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை பேசாலைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினர் மனித நடமாட்டம் இல்லாத பகுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த மூன்று குண்டுகளையும் கண்டெடுத்தனர். இந்தக் குண்டுகள் மன்னார் (14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் குழு இன்று காலை ஜெனீவா பயணம்

கொழும்பு,பெப்.20

ஜெனீவாவில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்கான அரசாங்க அமைச்சர்கள் குழு இன்று அதி காலை கொழும்பிலிருந்து புறப்பட ஏற்பாடாகி இருந்தது.

முன்னதாக அரச தூதுக்குழுவின் ஒரு பிரிவினர் நேற்றுமுன்தினம் ஜெனீவா நோக்கிப் புறப்பட்டனர்.

நேற்றையதினம் அமைதிப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் தொடராக தமிழர் பாதுகாப்பு மாநாடு

### அடுத்த மாதம் நடத்த முடிவு

தமிழகத்தில் அடுத்த மாதம் ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடுகள் தொடராக நடத்தப்படவிருக்கின்றன.

தந்தை பெரியார் திராவிடக் கழகத்தின் தலைவர் கௌத்தூர் தா.செ.மணி தலைமையில் நடந்த கழகத்தின் ஆட்சிமன்றக் கூட்டத்தில் இந்த மாநாடு குறித்து முடிவு செய்யப்பட்டது.

அடுத்த மாதம் 6ஆம் திகதி சென்னையிலும் 12ஆம் திகதி சேலத்திலும் 19ஆம் திகதி கோவையிலும் 26 ஆம் திகதி மதுரையிலும் பாதுகாப்பு மாநாடுகள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாடுகளில் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் பங்குபற்றி உரையாற்றவிருக்கின்றனர். (3)

## அரச ஊழியர் வேலைநிறுத்த முஸ்தீபு

கொழும்பு,பெப். 20

2006 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சம்பள உயர்வு சுற்றுநிருபத்தின்படி குறைந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படாத பட்சத்தில் அரசதுறையில் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தப்போவதாக அரச துறை சம்பள மீளாய்வு தொழிற்சங்கக் குழு நேற்றுத் திடீர் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது.

இதுதொடர்பில் நேற்று ஜனாதிபதி மஹிந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை உடன் நீக்கு! விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி!!

### ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு தீர்மானம்

சென்னை,பெப்.20

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டுமென்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தமிழகத்தில் நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் புதுவை மாநிலத் தலைவர் லோகு ஐயப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

* தமிழகத்தில் அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு உதவக்கூடிய வகையிலும், தமிழீழ மக்களின் போராட்டத்துக்கு ஆதரவளிக்கத் தமிழக மக்களுக்குள்ள ஜனநாயக உரிமையை மீட்டளிக்கும் வகையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான (14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் தனித்தரப்பை வலியுறுத்தவே ஜெனீவாப் பேச்சில் பேரியல் பங்கேற்பு

### நேற்று அவரே தெரிவித்தார்

கொழும்பு, பெப்.20

ஜெனீவாவில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சில் கலந்துகொள்வதற்காக அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாகச் செல்கின்றேன்.

அடுத்தகட்டப் பேச்சிலாவது முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்று அரசுக்கும் புலிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கவும், முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், நியாயத்தையும் சுட்டிக்காட்டவுமே செல்கிறேன்.

இதுதொடர்பாக நான் தமிழீழ விடுதலைப் (14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஸில் நேற்றிரவு வெடிபொருள்கள் மீட்பு!

### பயணிகள் 49 பேர் தடுத்துவைத்து விசாரணை

புத்தளம்,பெப்.20

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸில் இருந்து நேற்று ஒருதொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அந்த பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு இரவிரவாக விசாரிக்கப்பட்டனர்.

புத்தளம் வழி ஊடாகப் பயணிக்கும் இந்தத் தனியார் பஸ், புத்தளம் - அனுராதபுரம் பாதையில் சாலியவெல பகுதியில் பொலிஸாரினால் இரவு 8 மணியளவில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அப்போது பஸ்ஸிற்குள் பை ஒன்றினுள் உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த (14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org





நகைச்சுவை எழுத்தாளர் பொ.சண்முகநாதனின் நூலின் அறிமுக விழா நேற்றுக்காலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா வெளியிட்டு வைக்க மானிப்பாய் சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் பெற்றுக்கொள்வதையும் - நடுவில் நூலாசிரியர் பொ.சண்முகநாதன் நிற்பதையும் முதலாவது படத்திலும் -

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்துவதை இரண்டாவது படத்திலும் பேராசிரியர் சிவலிங்கராஜா, முன்னாள் நீதிவான் மு.திருநாவுக்கரசு, ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, மூத்த எழுத்தாளர் வரதராஜன் ஆகியோர் உரையாற்றுவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# சண் அங்கிளின் நூல் அறிமுகம் நேற்று சிறப்புடன் நடைபெற்றது

யாழ்ப்பாணம்,பெப்.20

நகைச்சுவை எழுத்தாளர் பொ.சண்முகநாதன் (சண் அங்கிள்) நினைக்க... சிரிக்க... சிந்திக்க.... என்னும் தலைப்பில் உதயனில் தொடராக எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள் உள்ளடக்கிய நூலின் அறிமுக விழா நேற்றுக்காலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் டாக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு மூத்த எழுத்தாளர் சிவஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி) தலைமை வகித்தார்.

மங்கள விளக்கை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ ப.ஜெயக்குமார், மூத்த எழுத்தாளர் சாகித்தியரத்தினம் வரதராசன் ஆகியோர் ஏற்றினர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி வரவேற்புரை நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை மூத்த எழுத்தாளர் சாகித்தியரத்தினம் தி.ச.வரதராசனும் (வரதர்), தலைமையுரையை சிவஸ்ரீ சி.சிவசரவணபவனும் (சிற்பி) வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜாவும் வழங்கினர்.

தொடர்ந்து முதற் பிரதியை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா வெளியிட்டு வைக்க மானிப்பாய் சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் சு.சிவகுமார் பெற்றுக்கொண்டார்.

மதிப்பீட்டுரையினை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவும்(விகடகவி) ஏற்புரையினை நூலாசிரியர் பொ.சண்முகநாதனும் நிறைவுரையினை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்தினர்.

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு நூலாசிரியர் பொ.சண்முகநாதனுக்கு பொன்னாடை போர்திக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கவிஞர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (3-7)

# கண்ணி அகற்றும்போது அது வெடித்ததில் டெனிஸ் நிறுவனப் பணியாளர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.20

இளவாலை, பெரியவிளான் பகுதியில் நேற்று கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த டெனிஸ் கண்ணி அகற்றும் பிரிவைச் சேர்ந்த பணியாளர் காயமடைந்தார்.

கண்ணிவெடி ஒன்று தவறுதலாக வெடித்ததாலேயே அவர் காயமடைந்தார் எனக் கூறப்பட்டது.

காயமடைந்த பணியாளரான் அன்ன சத்திரலேனைச் சேர்ந்த அண்ணாமலை முருகதாஸ் (வயது-25) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருக்கு கையில் காயம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (3-14-15-78)

# தனியார் பாதுகாப்புப் பிரிவினர் ஆயுதம் கையாள்வதற்குத் தடை!

கொழும்பு,பெப்.20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது ஏற்படக்கூடிய வன்முறைகளை தடுப்பதற்காக தனியார் பாதுகாப்புப் பிரிவினரின் ஆயுதக் கையாள்விற்குத் தடை விதிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலீஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தனியார் பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தேவைகளுக்காக ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு இடமுள்ளதால் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

அத்துடன் தனியார் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்புப் படை அதிகாரிகளின் உடைகளை ஒத்த உடைகளை அணிவதனை தடைசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பொலீஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார். (ஐ)

# கிணற்றில் தவறி வீழ்ந்து 8 வயதுச் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். நகரை அண்டிய ஸ்ரான்லி வீதிப் பகுதியில் எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்றுக்காலை இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த இந்திரகுமார் மருனா(வயது 8) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் பெற்றோர்கள் கோயிலுக்குச் சென்றிருந்தனர் என்றும் கிணற்றுக்கு குளிக்கச்சென்ற சிறுமியின் சகோதரன் சிறுமி கிணற்றினுள் இறந்து கிடப்பதைக் கண்டு அயலவரின் உதவியுடன் மீட்டார் என்றும் - கூறப்படுகின்றது.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (3-14-15-78)

# சாரணிய வழிகாட்டுநர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,பெப்.20

சாரணிய தந்தை பேடன் பவல் தின நிகழ்வு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக யாழ். வலயத்துக்குட்பட்ட சாரணிய வழிகாட்டுநர்களை ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3)

# இளைஞர் குழு ஒன்றினால் கடை தாக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். நகரத்துக்கு அண்மையில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் இளைஞர் குழுவொன்றினால் அடித்துநொறுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பல்பொருள் நிலையத்துக்கு சென்ற இளைஞர் குழு ஒன்று கடனுக்கு சிகரெட் கேட்டதாகவும் -

கடை உரிமையாளர் கொடுக்க மறுத்ததினால் இளைஞர் குழு அந்த கடை உரிமையாளரைத் தாக்க முற்பட்டபோது அவர் ஓடித்தப்பிவிட்டார் என்றும் -

பின்னர் கடையின் பெயர்ப்பலகை, கதவுகள் என்பவற்றை அடித்து நொறுக்கி விட்டு சென்றுள்ளது என்றும் - கூறப்பட்டது.

இது தொடர்பாக கடையின் உரிமையாளர் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (3-13-14)

# நிறுவை கருவிகளுக்கு 'சீல்' இடும் பணி நாளைமுதல்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் நிறுவை, அளவைக் கருவிகளுக்கு 'சீல்' இடும் பணி நாளை முதல் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பணிகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய தினங்களில் அலுவலக நேரத்தில் இடம்பெறும் என்றும் -

வர்த்தகர்கள் நிறுவை, அளவைக் கருவிகளுக்கு இத்தினங்களில் 'சீல்' இடும்படியும்- மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (3-14)

# கற்கோவளம் புனித நகரத்தில் 15 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

தென்மராட்சி,பெப்.20

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென பருத்தித்துறை கற்கோவளம் புனித நகரில் கே.பீ.எம்.ஜி. நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் 100 வீட்டுத் திட்டத்தில் வேலைகள் பூர்த்தியடைந்த 15 வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் இவ்வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

முதன்மை விருந்தினராக நிறுவனப் பங்காளர் இராஜன் ஆசீர்வாதமும் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் கலந்துகொள்வர்.

இவர்களுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி ஆகியோரும் கலந்துகொள்வர். (3-117)

# மாணவருக்குப் படையினர் சைக்கிள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவர்களுக்குப் படையினர் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தென்பகுதியில் உள்ள நன்கொடையாளர்களினால் வழங்கப்பட்ட நான்கு சைக்கிள்கள் 515ஆவது படைத் தலைமையகத்தினால் கடந்த வியாழக்கிழமை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். இராணுவத் தளபதிக்குப் பதிலாக 515 ஆவது கட்டளை அதிகாரி, யாழ்.பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, யூனியன் கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் வழங்கப்படும் ஒத்தாசை தொடர்பாக ஆசிரியர்களினால், வருகை தந்திருந்தோருக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

- இவ்வாறு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

# யுவராஜ், டோனி அதிரடி விளாசல்; ஐந்தாவது ஆட்டமும் இந்தியாவிடம்

கராச்சி,பெப்.20

யுவராஜ் சிங்கும் டோனியும் இணைப்பாட்டமாக 146 ஓட்டங்களை விளாச இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

யுவராஜ் சிங் 93 பந்துகளில் 107 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை டோனி 77 ஓட்டங்களை 56 பந்துகளில் ஆட்டமிழக்காது பெற்றார். டோனி கடைசி 3ஓவர்களில் 4 சிக்ஸர்களை விளாசி இன்னும் 19 பந்துகள் மீதமிருக்கையில் இந்தியாவிற்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்.

கடந்த ஆட்டங்களில் பிரகாசித்த பதான், சச்சின் ஆகியோருக்கு இந்த ஆட்டத்தில் ஓய்வு கொடுக்கப்பட்டு சுழற்பந்துவீச்சாளர் ரமேஸ் பவார் அணிக்கு இணைக்கப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் தரப்பில் மொகமட் யூசுப் 67 ஓட்டங்களையும் யுனிஸ்கான் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும் பெற்று 286 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை முடித்தது. இந்தியா சார்பில் சிறிசாந் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் சிறந்த பெறுபேறான 58 ஓட்டங்களுக்கு 4 விக்[illegible] அடைந்தார். அவர் தான் வீசிய முதல் 3 ஓவர்களிலும் ஆரம்ப 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் 20 பந்துகளை எதிர் கொண்டு 21 ஓட்டங்களைப் பெற்று ரமேஸ் பவாரின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவர் ரமேஸ் பவாரின் அந்த ஓவரில் ஒரு சிக்ஸரை விளாசியிருந்தார்.

பாகிஸ்தான் அணியில் கடந்த 4 ஆட்டங்களிலும் பிரகாசிக்கத் தவறிய மொகமட் யூசுப் மற்றும் யுனிஸ்கான் ஆகியோர் அரைச் சதத்தைக் கடந்தனர். கடைசி ஓவர்களில் களமிறங்கிய அப்துல் றசாக் அதிரடியாக ஆடி 15 பந்துகளில் 24 ஓட்டங்களை விளாசினார்.

இந்திய அணித்தலைவர் டிராவிட் 50 ஓட்டங்களைப் பெற்று ஒரு நாள் ஆட்டத்தில் 9000 ஓட்டங்களை பெற்ற 8 ஆவது வீரர் ஆனார்.

ஆனால் 31ஆவது ஓவரில் மொகமட் சமியின் பந்துவீச்சிற்கு டிராவிட் ஆட்டமிழந்த போது இந்திய அணி 141 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டை இழந்திருந்தது. மேலும் 19 ஓ[illegible] ஓட்டங்களை பெறவேண்டிய இக்கட்டான நிலையில் டோனி களமிறங்கினார்.

யுவராஜ் சிங் 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது காலில் சுளுக்கு ஏற்பட்டதால் தொடர்ந்து விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் 'ரன்னரின்' உதவியுடன் தொடர்ந்து ஆடிய யுவராஜ் சிங் ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார்.

மகேந்திர சிங் டோனி சமியின் கடைசி 2ஓவர்களிலும் 3 சிக்ஸர்களை விளாசினார். சமி 8.5 ஓவர்கள் பந்துவீசி 65 ஓட்டங்களை அள்ளி வழங்கினார். இந்த வெற்றி மூலம் இந்திய அணி தொடரை 4:1 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது. சிறப்பாக விளையாடிய யுவராஜ் சிங் சிறந்த ஆட்டநாயகன் விருதையும் கைப்பற்றினார்.

யுவராஜ் சிங் இத்தொடரில் 5 ஆட்டங்களில் 344ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 1 சதமும் 2 அரைச்சதமும் அடங்கும்.

இந்த தொடர் வெற்றியின் மூலம் கடந்த ஆண்டு இந்தியா வந்த பாகிஸ்தான் தொடர்ந்து 4ஆட்டங்களில் வென்றமைக்கு பழிவாங்கிக் கொண்டது டிராவிட் தலைமையிலான இந்திய அணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஜெனிவா சந்திப்பு கடைசி வாய்ப்பு

இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும், புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நேரடி உயர்மட்டப் பேச்சுகள் நாளைமறுதினம் ஜெனிவாவில் ஆரம்பமாகின்றன.

மூன்று ஆண்டு காலத்தின் பின்னர் - இலங்கையில் புதிய அரசு பதவியேற்று மூன்று மாதங்களின் பின்னர் - முதல் தடவையாக இந்தப் பேச்சுகள் நடைபெறப்போகின்றன.

இந்தப் பேச்சுகளில் பல விடயங்கள் ஆராயப்படலாம் என்று ஆரவாரமாகக் கொழும்பில் செய்திகள் வெளியானாலும் நாம் இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஒருவரி விடயமே அடிப்படை அம்சமாக - நிகழ்ச்சி நிரலாக - இருக்கப் போகின்றது என்பது உறுதி. அது தற்போது நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டு ஏற்பாடுகளை முழு அளவில் நடைமுறைப்படுத்தி அதன்மூலம் யுத்தநிறுத்த நிலைமையை மேம்படையச் செய்வது என்பதேயாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி நாளை மறுதினத்துடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் அந்த ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி யுத்த நிறுத்தத்தை மேம்பாடடையச் செய்வது குறித்துப் பேசவேண்டியிருப்பது ஓர் ஆயத்த நிலையாகும்.

இந்த நான்கு ஆண்டு காலத்தில் அவ்வப்போது விடுதலைப் புலிகள் புரிந்துவந்த யுத்த நிறுத்த மீறல்கள் எனத் தான் முறைப்பாடுசெய்த விடயங்களைக் கூட்டிக்கழித்து புள்ளி விவரமாகத் தயாரித்திருக்கும் இலங்கை அரசத்தரப்பு அதில் பெரும்பாலானவற்றைப் புலிகளே புரிந்திருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை தனது துரும்புச் சீட்டாக ஜெனீவாப் பேச்சுகளில் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தப் புள்ளிவிவரத் திரட்டல்களில் கூறப்பட்டபடி யுத்த நிறுத்த மீறல்களில் புலிகள் ஈடுபட்டார்களா என்ற கேள்வி ஒரு புறமிருக்க அத்தகைய மீறல்கள் யுத்த நிறுத்த நடை முறையாக்கலில்- அமுல்படுத்தலில் ஏற்பட்ட தவறுகளில் ஒரு பகுதியேயன்றி அவைமட்டும்தான் முழுத்தவறுகளும் என்பதல்ல என்ற விடயம் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

தெட்டத்தெளிவாக - செம்மையாக- வரையப்பட்டுள்ள புரிந்துணர்வு வாசகத்தின் அடிப்படை அம்சங்களை நிறைவேற்ற - நடைமுறைப்படுத்த - இலங்கை அரசுத்தரப்பு தவறியிருப்பதே இத்தகைய மீறல்களுக்கு வழிவகுத்ததோடு, ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் பெரும் பின்னடைவை - பாதிப்பை - ஏற்படுத்தி பெரிய தவறாக அமைந்திருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

எல்லாவிதமான வன்முறைகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பது புரிந்துணர்வு வாசக ஏற்பாடு. ஆனால், அது மட்டும்தான் அந்த ஒப்பந்தத் தினால் வலியுறுத்தப்படும் அம்சம் என்பதல்ல. வன்முறை கள், இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதோடு இயல்பு நிலை திரும்புவதற்காக செய்யப்படவேண்டிய பல விடயங் களும் அதில் தெட்டத்தெளிவாக வரையறுக்கப்பட்டிருக் கின்றன.

* வடக்கு - கிழக்கில் இயங்கும் துணைப்படைகள், ஒட்டுப்படைகள், ஆயுதக்குழுக்கள் போன்றவற்றின் ஆயுதங்களைப் பட்டு அவை வடக்கு - கிழக்கிற்கு அப்பால் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

* உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசுப்படைகள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பிரதேசங்களைக் கைவிட்டு வெளியேறி, அவற்றை உரிய மக்களிடம் கையளித்து அங்கு அவர்கள் தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்கவும், தொழில் செய்யவும் அனுமதிக்க வேண்டும்.

* வடக்கு - கிழக்கு கரையோரத்தில் மீனவர்கள் தமது தொழிலைப் புரிய கட்டுப்பாடின்றி அனுமதிக்க வேண்டும்.

* அரசுப்படைகள் தாம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பொது இடங்கள், ஆலயங்கள் மற்றும் மத வழிபாட்டு மையங்கள் போன்றவற்றை விட்டு வெளியேறி அவற்றை மக்கள் பாவனைக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

* புலிகளின் ஆயுதம் ஏந்தாத அரசியல் போராளிகள் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு கட்டுப்பாடின்றி வந்து தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதான நிலைமை பேணப்பட வேண்டும்.

-இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசுத் தரப்பில் நிறைவேற்றப்படாமல் - நடைமுறைப்படுத்தப்படாமல் - செயலுருக்கொடுக்காமல் - இழுத்தடிக்கப்பட்டு வரும் கடப்பாடுகள், பொறுப்புகளின் பட்டியல் நீண்டது.

இவற்றைச் செய்யாமல் விட்டமை மாத்திரமின்றி இந்தக் கடப்பாடுகள், பொறுப்புகளுக்கு மாறான- முரணான- விடயங்களை அரசுப்படைகள் முன்னெடுத்து வருகின்றமை பாரிய ஒப்பந்த மீறல் போக்காகும்.

வடக்கு - கிழக்கிலிருந்து துணைப்படைகள் மற்றும் ஆயுதக் குழுக்களை அகற்றி ஆயுதங்களைக் களைய வேண்டிய அரசுத்தரப்பு அதற்குப் பதிலாக அதற்கு முரணாக தனது கண்காணிப்பிலும், ஒழுங்கமைப்பிலும், ஏற்பாட்டிலும் ஒட்டுப்படைகளை உருவாக்கி தமிழர் தரப்பின்மீது- புலிகளின்மீது - ஏவிவிட்டு வஞ்சகம் புரிகின்றது.

யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் இன்று இவ்வாறு கேள்விக்குரியதாய் மாறியிருப்பது, யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளை நடைமுறைப்படுத்தத் தவறியதால் மட்டுமின்றி, அதற்கு முரணாக வேண்டுமென்றே முன்னெடுக்கப்படும் மேற்படி சதிச் செயல்களாலும்தான் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இவைபற்றியெல்லாம் தீர்க்கமாக - திட்டவட்டமாக - விரிவாக - அக்குவேறு ஆணிவேறாக ஜெனிவாப் பேச்சுகளின் போது இரண்டு நாட்களிலும் ஆராயப்படும் என்பது திண்ணம்.

இந்த இரண்டு நாள் பேச்சுகளில் இவ்விடயங்கள் குறித்து தெளிவான முடிவுகள் எட்டப்பட்டு, களத்தில் உறுதியாக அவை நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செம்மையாகச் செயற்படுத்துவது குறித்து அந்த ஒப்பந்தம் செய்து நான்கு ஆண்டுகள் முடிந்த பின்னர் இப்போதுவந்து குந்தியிருந்து பேசுவது போல -

மீண்டும் சிலகாலம் கழித்து வந்திருந்து திரும்பவும் ஆரம்பத்திலிருந்து பேசும் நிலைமை வராது.

அப்போது, குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூட எத்தனிக்கும் செயலாகவே அது அமையும். இது கடைசி வாய்ப்பு என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு ஜெனிவாப் பேச்சு மேடையில் வந்து அமர்வது பிரதிநிதிகளுக்கு - குறிப்பாக அரசுத்தரப்புப் பிரதிநிதிகளுக்கு - நல்லது. தவறிழைத்தால் அது கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்யும் செயலாகிப் போகும்.

# மோ.சைக்கிள்- ஹண்டர் மோதி விபத்து: மனைவி உயிரிழப்பு; கணவர் படுகாயம்!

## நாவற்குழியில் நேற்றுக்காலை சம்பவம்





(படங்கள்: கைதடிச் செய்தியாளர்)

கைதடி,பெப்.20

நாவற்குழியில் உள்ள அரச உணவுச் களஞ்சியத்துக்கு முன்பாக - யாழ். - கண்டி வீதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரது கணவர் படுகாயமடைந்தார்.

தம்பதியர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும், ஹண்டர் ரக வாகனமும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

தென்மராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும், யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி நோக்கிப் பயணித்த ஹண்டருமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

இதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த திருமதி தவமணி சிறீகாந்தா (வயது-43) என்பவர் தலையில் காயமடைந்து சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த அவரது கணவரான முருகப்பா சிறீகாந்தா (வயது-48) என்பவர் படுகாயமடைந்தார். இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

விபத்தில் சிக்கிய மோட்டார்ச் சைக்கிள் பலத்த சேதமடைந்த நிலையில் ஹண்டரின் முன்பாகக் காணப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரிப் பொலீஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தனர். ஹண்டர் சாரதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டதுடன், ஹண்டரும் மோட்டார் சைக்கிளும் பொலீஸாரால் எடுத்துச்செல்லப்பட்டன.

(எ-15-31-75-78)

# தாம் கடமையாற்றும் பிரிவுகளிலேயே கிராம அலுவலர்கள் வசிக்க வேண்டும்

## பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.20

கிராம அலுவலர்கள் தாம் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர் பிரிவுகளிலேயே நிரந்தரமாக வசிக்கவேண்டும்.

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்கா இவ்வாறு அறிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சுற்றறிக்கையில் - பொதுமக்கள் தினத்துக்குத் தினம் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் - கஷ்ரங்கள் பற்றி அடிக்கடி அமைச்சுக்கு முறைப்பாடு செய்தவண்ணம் உள்ளனர்.

கிராம அலுவலர்கள் தாம் கடமை புரியும் பிரிவிற்குள் வசிக்காத காரணத்தினாலேயே பொதுமக்கள் இவ்வாறு கஷ்ரத்திற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என அறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான வதிவிட நற்சான்றிதழ் பெறுவதிலும் -

நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டிய போதும் உரிய நேரத்தில் இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது மிகத் தர்மசங்கடத்திற்கு உள்ளாகின்றனர்.

இதனால், இவ்வாறான சூழ்நிலையை நீக்கும் பொருட்டு அமைச்சின் தீர்மானப்படி சகல கிராம அலுவலர்களும் தமக்குப் பொறுப்பான பிரிவிலேயே வசிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-175)

# கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப்.20

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் ஜனாதிபதி நிதியத்தின் உதவியுடன் நடத்தப்படவுள்ள கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம்,கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-203)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவில் சுகாதார அதிகாரி பணிமனை

## சனிக்கிழமை முதல் இயங்குகின்றது

தென்மராட்சி,பெப்.20

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்றுமுன்தினம் முதல் சாவகச்சேரி மருத்துவமனை வளவில் இயங்கத் தொடங்கியுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தா.சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட தாய்சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் சொலமன், கட்டடத்தில் பணிமனைச் செயற்பாடுகளை ஆரம்பித்துவைத்தார்.

நிகழ்வுக்கு வருகை தந்திருந்த கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளின் தாய்மார்களுக்கு ''ஆரம்பகால பிள்ளை நலத்திற்கு விருத்தி'' என்னும் தலைப்பில் டாக்டர் சொலமன் கருத்துரை வழங்கினார்.

சுகாதாரம் தொடர்பான கண்காட்சி நடைபெற்றது. (எ-117)

## உதயவாக்கு

மனிதநேயம் மிக்க சேவையே இன்று வையகத்தில் தேவை. இதனை உணர்வதும், அதன்படி நடப்பதும் அனைவரதும் கடமை.
- ஓர் அறிஞர்.

## நாளை

மாசி 09
செவ்வாய்க்கிழமை
21.02.2006
திதி: அட்டமி
முன் இரவு: 07.50 வரை
நட்சத்திரம் : அனுஷம்
முன் இரவு : 11.05
சுபநேரம் : 11.01 - 12.31
ராகுகாலம் :03.31 - 05.01
(யாவும் பழைய நேரப்படி)

# அத்தியார் இந்துவை அண்மித்த கடை, வீடுகள் மூன்று மாதகாலமாக வெறிச்சோடிய நிலையில்!

கோப்பாய்,பெப்.20

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியை அண்டிய கடைத்தொகுதிகள், குடிமனைகள் கடந்த 3 மாதகாலமாக வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி இப்பகுதியில் உள்ள கடைத் தொகுதியில் வைத்து இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு மூன்று இளம் விவசாயிகள் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் ஒரு மாத காலம் அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர வேண்டி நேரிட்டது.

தற்போது நிலைமை ஓரளவு வழமைக்குத் திரும்பிய போதிலும் பொது மக்கள் எவரும் இப்பகுதிகளில் மீளக் குடியமரவரவில்லை. இதனால் அப்பகுதி சூனியப் பிரதேசமாகக் காணப்படுகின்றது. (எ-72)

# கோப்பாய் ஆஸ்பத்திரியில் தொலைபேசி இல்லை: இரவில் அம்புலன்ஸ் சேவை நடத்த முடியாத நிலை

கோப்பாய்,பெப்.20

கோப்பாய் சுற்றயல் கூறு வைத்திய சாலையில் அம்புலன்ஸ் சேவையிலிருக்கின்ற போதிலும் இரவு வேளைகளில் அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கான அழைப்புகளை வழங்கக் கூடியதாக அங்கு தொலைபேசி இணைப்பு இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், வலிகாமம் கிழக்குப் பகுதி மக்கள், இரவுவேளைகளில் நோயாளர்களை ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இது குறித்து வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்:-

தொலைபேசி இணைப்பைப் பெறுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுக் கடந்த வருடம் உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. எனினும் இதுவரை இணைப்பு வழங்கப்பட வில்லை - கூறினார்.

(எ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## ஒப்புநோக்குநர்கள்

ஒப்புநோக்குநர் பணியில் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழுடன் ஆங்கிலத்திலும் இப்பணியைச் செய்வதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கண்பார்வைக் கூர்மை உள்ளவர்களாகவும் இரவிலும் பணியாற்றக்கூடிய தேகநலம் உடையவர்களாகவும் இருத்தல் அவசியம்.

தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சியும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியும் கொண்ட 20 வயதுக்குக் குறையாதவர்கள் பயிலுநர்களாக இணைக்கப்படுவர்.

சம்பள விகிதம் தகுதி மற்றும் அனுபவத்துக்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

உங்கள் சுய விவரங்களுடன் கிராம சேவை அலுவலர் மற்றும் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: **24.02.2006**

**உதயன் மனிதவளசேவை**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி-47891) (21.16.15.42)

---

THE HALO TRUST

# VACANCY

**THE HALO TRUST** INVITES APPLICATIONS FROM SUITABLE CANDIDATES FOR THE FOLLOWING POSITION FOR ITS OFFICE IN JAFFNA.

***Office Manager***

*Desired Qualifications:*

- Considerable experience in office administration and management.
- Demonstrated competence and experience with MS office applications.
- Excellent grasp of written and spoken English.
- Experience of working with international staff.
- At least 25 years

**Women candidates are encouraged to apply.**

*Please apply, with a typed CV, to the HALO Jaffna Office at the address below. Leave a contact telephone number.*

The Programme Manager
**The HALO Trust,**
655, Navalar Road,
Jaffna. (46947)

---

சீட்டிழுப்பு இல. 1686

18.02.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**29 31 49 67 (12)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300908414 இலிருந்து 300924305

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா **1,67,13,500/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | | 1,67,13,500/- | |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 31 | 5,000/- | 1,55,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 424 | 1,000/- | 4,24,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,395 | 500/- | 6,97,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,458 | 40/- | 8,18,320/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,320 | 20/- | 3,86,400/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,91,478 | 10/- | 29,14,780/- |
| மொத்தம் | | | 73,96,000/- |
| தங்க நகைகள், [illegible] | 5 | 100,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,33,113 | | 78,96,000/- |

[illegible]

**இந்த புதன்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,74,92,250/-**

[illegible]

| | |
|---|---|
| [illegible] | 300910684-2-13 |
| [illegible] | 300914018-7-74 |
| [illegible] | 300922208-0-82 |
| திருகோணமலை | 300911521-5-47 |
| [illegible] | 300911817-4-64 |

வளமான வாழ்விற்கு

---

# விற்பனைக்கு

நல்ல நிலைமியுள்ள JAPAN JVC 3CD AUDIO டெக்செற், வீடியோ NOMAL டெக், AUDIO டப்பிங் டெக், AUDIO கெசற் டெக், DVD பிளையர் அத்துடன் இந்தியன் உழவு இயந்திரம் (சைக்ரர்) என்பன விற்பனைக்குண்டு.

(46991)(26.11.45)

தொடர்பு:
ஜெகன் வீடியோ-ஓடியோ சென்ரர்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி
தொ.பே:077 5523135

---

## இல்ல மெய்வன்மை போட்டி

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலையின் அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற இருக்கின்றது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி.அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக அறவழிப் போராட்டக் குழுவின் செயலதிபர் எம்.கே.ஜீவகதாஸும் கலந்து கொள்வர். (ஐ-75)

## சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு

வலி.மேற்கு, பெப்.20

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்குப் பெண்கள், சிறுவர்களின் உரிமை மீறல் சம்பந்தமான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கொன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மனித உரிமைகள் இல்லத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இம் மாதம் 25, 26ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களும் முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும். (எ-175)

## சீமைக்கிளுவை மர உற்பத்திக்கு மானியம் கிடைக்கும்

தென்மராட்சி,பெப்.20

யாழ்மாவட்டத்தில் சீமைக்கிளுவை எனப்படும் 'கிளிசரா' மர உற்பத்திக்கு மானியம் வழங்கப்படவுள்ளது.

தென்பகுதியில் கிளிசரா மர இலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதையடுத்து யாழ்.மாவட்டத்தில் இந்த மரத்தின் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மானியத்திற்கு விண்ணப்பிப்போர் நல்லூர் கமநல சேவைகள் நிலையத்தில் தென்னை பயிர்ச் செய்கைச் சபையுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறி[illegible]

---

# அறிவித்தல்

நோர்த் சீ லிமிட்டட் பழைய இரும்புகள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல் உதயன் பத்திரிகையில் 01.02.2006 ஆம் திகதி பிரசுரமானது. இதற்கமைய தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட கூறுவிலைகள் 28.02.2006 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படும்.

(46975) (39.26.11.45) **பிரதிப் பொது முகாமையாளர்.**

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

**756** சிவப்பு

மேடம்

17-02-2006

செல்லுபடியாகும் தொடர் இல. **5014669-5029320**

வெற்றி இலக்கங்கள் **18 36 39 45**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/-வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 73,49,080/-
தொடர் இல. 4104431 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 பெப்ரவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,23,900 | 10/- | 32,39,000/- |
| 2 இலக்கங்கள் | 29,741 | 20/- | 5,94,820/- |
| 1 இல+லக்கினம் | 29,377 | 30/- | 8,81,310/- |
| 2 இல+லக்கினம் | 2,717 | 100/- | 2,71,700/- |
| 3 இலக்கங்கள் | 780 | 500/- | 3,90,000/- |
| 3 இல+லக்கினம் | 84 | 5,000/- | 4,20,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| 4 இல+லக்கினம் | 0 | 10,00,000/- | 0 |
| மொத்தம் | | | 62,96,830/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,86,609 | | 73,49,080/- |

**இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 17,23,200/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 5015414-9-82 |
| மாத்தறை | 5015637-8-25 |
| மாத்தளை | 5018837-4-32 |
| கண்டி | 5018980-2-22 |
| அம்பாறை | 5017941-5-79 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராதாகிருஸ்ணன்

பட்டறிவு நிறைந்த பெட்டகமே!
பாசம் நிறைந்த இருதயமே!
பண்பு நிறைந்த பொக்கிசமே!
இப்பாரினில் நிலைத்த வாழ்வு
அறுபத்து இரண்டு வருடம்தான் நிலைத்தனவோ
உமது பிரிவை எண்ணி எண்ணிக் கலங்குகின்றோம் ஐயா!
தங்களின் பிரிவோ என்றென்றும் ஈடுசெய்ய முடியாதய்யா!
உமது பிரிவுத் துயரில் கலங்குகின்றோம் நாம்
தாங்கள் காட்டிய வழியோ எங்களை நல்வழிப்படுத்தும் ஐயா!
தங்கள் ஆன்மா அமைதி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

(சி/47952)(26.11.45) வீதித் தொழில்நுட்பவியல் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது), கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரவில் அரசினர் ஆஸ்பத்திரியில் ஆண் சிகிச்சை விடுதி அமையும்

## பொதுமக்கள் - நிறுவனங்களின் உதவியுடன்

பரந்தன்,பெப்.20

வேரவில் அரசினர் வைத்தியசாலையில் ஆண்களுக்கான சிகிச்சை விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி மற்றும் வலைப்பாடு மக்களின் பங்களிப்புடன் கரியாலை நாகபடுவான், பூநகரி மற்றும் முழங்காவில்-அபிவிருத்தி நிறுவனம் இந்த விடுதியை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் செயலாளர் செ.குழந்தைவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொதுச் சுடரினை வேரவில் உப தபாலதிபர் ஏற்றி வைத்தார். விடுதிக்கான முதலாவது அடிக்கல்லினை ஓய்வுபெற்ற நாடாளுமன்ற மொழி பெயர்ப்பாளர் திருமதி சோ.க. தம்பிப்பிள்ளை நட்டு வைத்தார். தொடர்ந்து வலைப்பாடு பங்குத் தந்தை, வைத்தியர் முருகானந்தன் மருத்துவர் தேவா, கிளிநொச்சி மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் ஆ.தமிழ்வாணன், தமிழீழ சுகாதார சேவைகள் நிர்வாகப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி வாமன் உட்பட பலர் அடிக்கல் நட்டனர்.(எ-6-352)

# பாலமோட்டையில் 122 பேருக்கு புதிதாக வங்கிக்கணக்கு திறப்பு

ஒட்டுசுட்டான்,பெப்.20

வவுனியா கிராமிய அபிவிருத்தி வங்கி தனது இரண்டாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு பாலமோட்டைக் கிராமத்தில் 122 பேருக்கு புதிதாக வங்கிக் கணக்குகள் ஆரம்பித்துவைத்துள்ளது.

வவுனியா கிராம அபிவிருத்தி வங்கியின் சேமிப்பை அதிகரிக்கும் நோக்கில் பாலமோட்டைக் கிராமத்தில் நடமாடும் சேவை ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. அதில் வைத்தே சிறுவர்கள் 84 பேருக்கும் ஏனைய பயனாளிகள் 38 பேருக்குமென சுமார் 122 பேருக்கு சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

அந்நிலையில், விவசாய முதலீட்டுக் கணக்கில் 5 ஆயிரம் ரூபா வைப்பிலிட்டவர்களில் குலுக்கல் முறைமூலம் அருளப்பு தியாகராசாவும், தளிர் சிறுவர் சேமிப்புப் கணக்கில் ஆயிரம் ரூபா வைப்பிலிட்டவர்களில் தியாகராசா திவ்வியநாதனும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-6-341)

# மல்லாவி நுண்கலைக் கல்லூரியில் மாதாந்த தமிழிசை அரங்கு

மல்லாவி, பெப்.20

தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் நடத்தப்படும் மல்லாவி நுண்கலைக் கல்லூரியின் மாதாந்த தமிழிசை அரங்கு கடந்த மாதம் 21 ஆம் திகதி அதிபர் சி.சிவசத்தியமோகன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வை அன்பு மாஸ்டர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ நுண்கலைப்பிரிவுப் பொறுப்பாளர் க.கண்ணதாசன் ஏற்றி வைத்தார்.

தமிழிசை அரங்க நிகழ்வில் நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் இசையரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக கலாவித்தகர் மா.தேவகாந்தனின் தமிழிசை நிகழ்வு நடைபெற்றது. இதில் நுண்கலைமாணி க.கண்ணதாசன் மிருதங்கம் வாசிக்க, இசைக்கலைமாணி திருமதி சிறீ சுபத்திராதேவி வயலின் வாசித்தார். இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், இசை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-322)



வேர்ள்ட்விஷன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் நடத்திவரும் சுகநல மேம்பாட்டு அறிவூட்டல் தெரு நாடகம் வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் நடைபெற்றுவருகின்றது. முழங்காவில் வைத்தியசாலை வளவில் மேற்படி தெரு நாடகம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# நிரந்தர வாகனப் பரிசோதகர் நியமிக்கப்படாமையால் சிரமம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கென மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் பிரதேச வாகன உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவட்டத்திற்கென மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நிரந்தர வாகனப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

இதனால் வாகனச் சாரதிகள் அனுமதிப் பத்திரம் பெறுதல், வாகனங்களைப் பதிவுசெய்தல், வாகன உரிமை மாற்றம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றிகொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகம் இயங்கி வருவதால் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த வாகனச் சாரதிகளின் நன்மை கருதி நிரந்தர வாகனப் பரிசோதகர் ஒருவரை நியமிக்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகனச் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6-352)

# இத்தாவிலில் தற்பாதுகாப்புப் பயிற்சி

பரந்தன், பெப்.20

பளை - இத்தாவில் பகுதிப் பெண்களுக்கான தற்பாதுகாப்புப் பயிற்சி அண்மையில் லெப்.பிரமிளா பயிற்சிப் பாசறையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில், பொதுச் சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பிறை, அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த தீபனா, இத்தாவில் தேசிய எழுச்சிப் பேரவைதுணைச் செயலாளர் பாலசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றி வைத்தார். பெண்களுக்கான தற்பாதுகாப்புப் பயிற்சிகளை போராளி பாமகள் ஆரம்பித்துவைத்தார்.

பளைக்கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திரமதனா தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.



கிளிநொச்சி, முருகானந்த மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. தரம் ஒன்றில் இணைந்த மாணவர்கள் ஒன்றுசேர்ந்து எடுத்த படங்கள்.
(படம்: நூநகரி செய்தியாளர்)

# கிளிநொச்சி சர்வதேசப் பாடசாலைக்கு புனர்வாழ்வுக்கழகம் ஓட்டோ அன்பளிப்பு

கிளிநொச்சி,பெப்.20

கிளிநொச்சி, சந்திரன் சர்வதேசப் பாடசாலைக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஓட்டோ ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இந்த ஓட்டோ கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலைப் பணிப்பாளர் இராஜகோபாலிடம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பகுதியின் உதவிப் பணிப்பாளர் கலையரசன் இந்த ஓட்டோவைக் கையளித்தார்.

ஓட்டோவைப் பெற்றுக்கொண்ட பாடசாலையின் பணிப்பாளர் இராஜகோபால், பாடசாலையின் நிர்வாகத் தேவைகளைப் பொறுத்தவரையில் இந்த முச்சக்கரவண்டியின் தேவை இன்றியமையாதது என்று தெரிவித்து, தமது நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். (எ-6)




# முல்லை. - நாயாறு வீதி பலத்தசேதம்; போக்குவரத்து துண்டிக்கும் நிலை!

முல்லைத்தீவு - நாயாறு பிரதான வீதி சேதமடைந்துள்ளதால் அவ்வீதியூடான போக்குவரத்துத் துண்டிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்துள்ளது. குறிப்பாக வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதுடன், இந்த வீதியூடாக வழமை போன்று இடம்பெற்றுவரும் பஸ் சேவையும் தடைப்படும் நிலை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலைமை தொடருமானால் செம்மலை, நாயாறு, உப்புமாவெளி, சிலாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள், போக்குவரத்துச் செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-6-341)

# சுதேச பாதுகாப்புச்சபை அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி மாவட்டத்துக்கான சுதேச பாதுகாப்புச்சபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதுதொடர்பான நிகழ்வு கடந்த 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் ஆ.தமிழ்வாணன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவைகள் சுதேச வைத்திய பிரிவுப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி தேவா, தமிழீழ சுகாதார சேவைகள் நிர்வாகப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வாமன, நிர்வாக அலுவலர் எஸ். கிருஸ்ணபிள்ளை, தமிழீழ சுகாதார சேவைகள் சுதேச வைத்தியர் திருமதி சி.குமாரி, தமிழீழ சுகாதார சேவைகள் மாவட்ட இணைப்பாளர் விஞ்ஞானக் கல்லூரிப் பணிப்பாளர் வைத்தி கலாநிதி சத்தியா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்தியம் செய்யும் பெரும் எண்ணிக்கையான சுதேச ஆயுள்வேத வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் கிளிநொச்சி மாவட்டதிற்கான சுதேச பாதுபாப்பு சபை நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக கே. திருலோகமூர்த்தியும், உப தலைவராக க. மார்க்கண்டுவும், செயலாளராக எஸ்.கணேசராஜனும், உப செயலாளராக கு.ஜீவரட்ணமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களாக க.இ.இராமசாமி, அ.இராதகிருஸ்ணன், திருமதி ஜெ.சந்திரமதி, திருமதி தி.அமிர்தகௌரி, மு.சத்தியராசா, திருமதி சு.மகேஸ்வரி, அ.ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (எ)

# சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீடு

வி.பி.யோசப்பின் ஆங்கில மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட 'மூடு பனிக்குள் ஒரு தேடல்' என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சி அன்னை இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது.

சிறுவர்களின் உளவளத்துணையினை மேம்படுத்துவதாக அமையப்பெற்ற இந்த நூலை அருட்தந்தை செல்வரட்ணம் அடிகளார் வெளியிட்டுவைக்க தமிழீழ அரசியல்துறை துணைப்பெறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக் கொண்டார். நூல் வெளியீட்டு உரையினை ச.ஏ. றெஜினோல்ட் அடிகளாரும் மதிப்பீட்டுரையினை கலாநிதி சோமஸ் கந்தனும் நிகழ்த்தினர். (த-352-204)



கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள நெற்செய்கையாளர்களுக்கான பயிற்சிவகுப்பு அண்மையில் ஊரியான் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணை [illegible]த் திணைக்களம் இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. இதன் போது எடுக்கப் [illegible] இது.
(படம்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CARE International - Srilanka

**Expression of interest and Invitation of Tenders for Construction of 40 units of Permanent Houses at Vinayagapuram - Vadamarachchi East for the Tsunami affected communities in Jaffna district.**

CARE International Sri Lanka, is a leading and pioneer relief and development agency established in Sri Lanka since 1956, and is activity involved in providing emergency relief assistance, trsansitional and permanant shelter, water and sanitation, psychosocial and livelihood programmes to restore the livelihood, of the affected communities by the Tsunami waves which devastated coastal areas of Sri Lanka, on 26th December 2004.

CARE International Sri Lanka hereby invites sealed tenders from the eligible bidders for the following works:

| Category No. | Description | Extent | No. of Units | ICTAD Reg.Grd. | Location and D.S. Division. |
|---|---|---|---|---|---|
| CAT. No.1/ VEK | Construction of Permanent Houses Single Storeyed (Total contract including material and labour | Floor area530 Sq.ft Package of10 units each 4 packages | 40 | Minimum M-5 | Village at Vinayagapuram in the Vadamarachchi, East - D.S. Division |

Bidding is open to all the Contractors who are determined as having the following minimum qualifications:

A. Preferably qualified contractors from the above district but not limited to.
B. Registration as contractor of grade specified in the above table under the scheme of National Registration of grading of Construction Contractors (NRGCC), developed by the Institute of Construction Training and Development (ICTAD)
C. Current membership of the National Construction Constructors Association of Sri Lanka (NCCASL) or any other reputed organization with similar status.
D. Shall have sufficient bid/technical ability and capacity to undertake the work, calculated in accordance with ICTAD guidelines.

**Terms and Conditions:**

1. Each tender shall be accompanied by and unconditional on-demand Bid-Bond in the form of a Bank guarantee confirmed by any commercial bank operating in Sri Lanka, in favour of ' CARE Sri Lanka', Equivalent to 2.5% of tender sum, valid for a period of 120 days from the date of opening of the tenders. This bond will be released to unsuccessful bidders once the tender procedure has been completed and to the successful bidders upon signing of the contract by all parties.
2. Bid documents can be collected from the Resettlement Support Unit (RSS) CARE International Head Office, No.8/8, Gregory's Road, Colombo-07 (Tele. 011-5344526/7) or from the Technical Team of CARE Sri Lanka area office, Kandy - Jaffna Road, Paranthan. (Tele: 021-2285135 & Fax 021- 2285093) during the office hours from Monday 20th February until Tuesday 28th February 2006 on payment of non - refundable fee of Rs. 2000 / - per set of document in cash.
3. Sealed tenders clearly marked with the notation "Tender for Permanent Houses Vadamarachchi East" and the relevant Category Number on the top left- hand corner of the envelope should be sent by Registered post to reach the Country Director, CARE International Sri Lanka, No. 7A, Gregory'sRoad,Colombo-07, before Tuesday 6th March 2006, or may be placed in the tender box kept at the above office.
4. CARE reserves the sole right to withdraw partly or whole or to award, not award, the tenders without providing any justification and/ or explanation whatsover to bidders who submit their proposals. Should the situation so warrant, CARE also reserves the right to award contract to more than one contractor as decided by the tender committee. In such event that CARE withdraws the tender process, the non - refundable deposit shall be refunded as decided by the tender committee.
5. Tender received with corrections that have not been properly authenticated or where price and / or terms and conditions have been changed using "White-out" are likly to be rejected will not be taken into consideration.
6. Tenders will be opened immediately after closing of the tender, at CARE International Head Office in Colombo. Bidders or their authorized representatives can be present at the opening of the tender.
7. "Certificate of Site inspection" is required to be submitted along with the tender. Site inspection can be arranged with prior appointment with Technical Team of CARE Area office Paranthan by Phone/021-2285093.
8. CARE Sri Lanka will not be responsible for any costs or expenses incurred by bidders for the preparation or delivery of bids.
9. Details of contracts on hand, Proven past performance (at least 3 years), Financial and resources capacity (i.e. Machinery & equipment - leased / owned), Workforce (supervisory, skilled and unskilled) shall be clearly indicated in the bidding document.
10. All the bidders are required to attend a Pre-bid conference on a date priscribed by the Resettlement Support Unit (RSS) of CARE Sri Lanka. Those who do not attend will be automatically disqualified from this bidding process.
11. The tendering process will be in accordance to CARE policy and procedures.

All decisions made by the Country Director/ Tender Board of CARE SriLanka for the bidding process will be the final.

**Resettlent Support Unit**
***CARE International SriLanka***
**No. 8/8, Gregory's Road,**
**Colombo 07**
**Tele:0115344526 / 0115344527**

## நீங்காத நினைவில்
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 06 - 1951

மறைவு 24 - 02 - 2003

அமரர்
## செல்லர் சின்னத்துரை

திதி: 20.02.2006

ஆண்டுகள் மூன்று போயின ஆறவில்லை எம் துயரம்
எங்களுக்கு நல் வழி காட்டிய அப்பாவே!
எங்களுக்கு இனிய வாழ்வு அளித்த அப்பவே!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப் போகாது அப்பா!
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.

(46533)
(26.11.45)

குடும்பத்தினர்.
சுதாகரன் (மகன்-லண்டன்).

## ஓராம் ஆண்டில் ஓராயிரம் நினைவலைகள்



மண்ணில் 15.04.1951

விண்ணில் 08.03.2005

அமரர்
## சதாசிவம் இரவீந்திரன்

ஓராண்டு கழிந்தாலும்
ஓராயிரம் எண்ணங்கள்
எங்கள் மனங்களில்...
உயிர் உள்ளவரை
உங்கள் எண்ணங்கள்
எங்கள் மனங்களில்...
உங்கள் முகம் வீசும் ஒளியில்
எங்கள் உள்ளம் குளிரும்...
உங்கள் ஆத்மசாந்திக்காய்
என்றும் உருகும்...

(46756)

மனைவி: தயாநிதி இரவீந்திரன், மக்கள்: சுஜன், சுஜந்தா, சுமன் மருமக்கள்: குகலட்சுமி, பிரதீபன், பேரப்பிள்ளைகள்: நிலேஸ், ரவீன்,தருண்

"சந்திரபவனம்" ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

**21,BROADWRTER ROAD,TOOTING, LONDON, S.W17 O.D.U, UK**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. கூட்டணியிலிருந்து விலக ம.தி.மு.க. முடிவு?



## கருணாநிதி தகவல்

சென்னை,பெப்.20

தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. நீடிக்கிறதா என்பது குறித்த முடிவு அதன் பொதுச் செயலாளர் வைகோவின் கையில்தான் இருக்கிறது என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கூறினார்.

இது தொடர்பாக வைகோ சனிக்கிழமை இரவுவரை எந்தக் கருத்தையும் கூறவில்லை - என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

ம.தி.மு.கவைப் பொறுத்தவரை ஜன.26 இல் வைகோவை என்னுடைய வீட்டுக்கே அழைத்து ஒன்றரை மணி நேரம் பேசினேன். அப்போது ஏறத்தாழ தொகுதிகளின் எண்ணிக்கை கூட முடிவு செய்யப்பட்டது. ஒரிரு தொகுதிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அப்போது கூறினேன்.

அதற்குப் பிறகு பெப். 8 இல் கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் நடந்தது. போட்டியிட விரும்பும் தொகுதிகள் எண்ணிக்கை மற்றும் பட்டியலை அளிக்க வேண்டும் என்று அதில் எடுக்கப்பட்ட முடிவின் தொடர்பாக எந்தப் பதிலும் இல்லை. பத்திரிகைத் தகவல்கள் மட்டுமே வருகின்றன.

இரு தினங்களுக்கு முன்புகூட திருமண விழாவில் வைகோவை துரைமுருகன் சந்தித்துப் பேசினார். அப்போதும் திட்டவட்டமான பதில் ஏதும் தரப்படவில்லை. கவிஞர் வைரமுத்து மூலமாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு எதுவும் பலன்தரவில்லை.

காளிமுத்துவின் பேச்சுகளுக்கு வைகோ முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என தி.மு.க. பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி வெளியிட்ட அறிக்கைக்கு இதுவரை பதில் இல்லை.

ம.தி.மு.க. கொள்கை விளக்க அணிச் செயலாளர் பதவியில் இருப்ப வர் தி.மு.கவைப் பற்றி மோசமாகப் பேசியதாக தகவல்கள் வந்துள்ளன.

கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. ஒதுங்குவதற்காகத் தோன்றுகிறதா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

பீகாரில் மத்திய அமைச்சர் பாஸ் வான் தனிக் கூட்ட ணியில் போட்டியிட் டது போல தமிழகத்தில் ம.தி.மு.க. தனி அணியில் போட்டியிடலாம் என்று பிரதமரிடம் வைகோ பேசியதாகக் கூறப்படுவது பற்றி எனக்குத் தெரியாது.

ம.தி.ம.க. நிர்வாகிகள் தொடர்ந்து தெரிவித்து வரும் கருத்துகள் பற்றி எதுவும் சொல்லத் தெரியவில்லை. அவர்கள் ஏதோ முடிவு எடுத்துவிட்டதாகத் தெரிகிறது. அப்படி ஒரு முடிவு எடுத்துவிட்டால் நாங்கள் எங்கள் முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும் - என்றும் கருணாநிதி தெரிவித்தார். (ஐ)

# டென்மார்க் ஓவியரின் தலைக்கு விலைபேசிய உத்தரப்பிரதேச அமைச்சரை கைது செய்க!

## பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை

சென்னை,பெப்.20

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய கேலிச்சித்தர ஓவியரின் தலையை வெட்டினால் 51 கோடி ரூபா பரிசு தருவதாகக் கூறிய உத்தரப் பிரதேச மாநில அமைச்சரை உடனடியாக பதவி நீக்கம் செய்து, கைதுசெய்யவேண்டும் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் எம். வெங்கைய நாயுடு கேட்டுள்ளார்.

நபிகள் நாயகத்தை அவதூறாகச் சித்திரித்து கேலிச்சித்திரம் வரைந்த டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஓவியரின் தலையைத் துண்டித்துக் கொலை செய்பவர்களுக்கு 51 கோடி ரூபா ரொக்கப்பரிசும் தமது எடைக்கு நிகராக தங்கமும் பரிசு வழங்கப்படும் என உத்தரப்பிரதேச மாநில ஹஜ் மற்றும் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் முகமது யாகூப் வெள்ளிக்கிழமை கூறியுள்ளார்.

வெளிநாட்டைச் சேர்ந்த கேலிச்சித்திர ஓவியரைக் கொலை செய்யுமாறு ஆத்திர மூட்டும் வகையில் அமைச்சர் பேசியது குற்றம் அல்ல; அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட மாட்டாது என்று உத்தரப்பிரதேச அரசு விளக்கம் அளித்தது.

இதையடுத்து அவரை கைதுசெய்யவேண்டும் என பா.ஜ.க. கோரியுள்ளது. (ஐ)




# புதிய கட்சி தொடங்குகிறார் தீண்டிவனம் இராமமூர்த்தி

சென்னை,பெப்.20

தமிழக காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட திண்டிவனம் இராமமூர்த்தி புதிய கட்சி தொடங்க உள்ளார்.

கருணாநிதியையும், வாசனையும் சமீப காலமாக அவர் விமர்சித்தார். முதலமைச்சர் ஜெயலலிதாவையும் சந்தித்தார். இதையடுத்து கட்சி விரோத செயலில் ஈடுபட்டதாக காங்கிரஸ் மேலிடம் அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆதரவாளர்களுடன் திண்டிவனம் ராமமூர்த்தி ஆலோசனை நடத்திவருகிறார்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் ராமமூர்த்தியுடன் தொடர்புகொண்டு ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்.

முன்னாள் எம்.பி.க்கள் தண்டாயுதபாணி, சிங்காரவடிவேலு, ராஜேஸ்வரன் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். முன்னாள் அமைச்சர் பூவராகனும் இந்த அணியில் இருக்கிறார்.

முன்னாள் எம்.பி.க்கள் விழுப்புரம் செல்லப்பா, ஆத்தூர் பழனிமுத்து, ஆண்டிமடம் தங்கராஜ், பாபநசம் ராஜாராமன், வால்பாறை தங்கவேலு ஆகியோரும் திண்டிவனம் ராமமூர்த்தியுடன் அணி சேருகிறார்கள்.

என் முடிவுக்கு தமிழகம் முழுவதும் ஆதரவு உள்ளது. காமராஜரால் அடையாளம் காட்டப்பட்ட அவரை போற்றுகிற அத்தனை காங்கிரஸாரும் என்னோடு இருந்து என் முயற்சியில் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்று இராமமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ)

# பறவைக் காய்ச்சலால் தமிழகத்தில் உடனடியாகப் பாதிப்பு இல்லை

மும்பை, பெப்.20

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தின் நந்துர்பார், துலே ஆகிய இரு மாவட்டங்களில் பறவைக் காய்ச்சல் நோயின் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை அரசு உறுதிப்படுத்தியது.

மத்தியப் பிரதேசத் தலைநகர் போபாலில் உள்ள ஆய்வகம் இதை உறுதிப்படுத்தியதாக மகாராஷ்டிர கால்நடை வளத்துறை அமைச்சர் அனீஸ் அகமது, மும்பையில் சனிக்கிழமை தெரிவித்தார்.

இதேவேளை -

பறவைக் காய்ச்சலால் தமிழ்நாட்டில் பாதிப்பில்லை என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு மண்டலத் தலைவரும் கால்நடை மருத்துவருமான டாக்டர் பி. செல்வராஜ் தெரிவித்தார்.

தமிழக வெப்ப நிலையைப் பொறுத்தவரை பறவைக் காய்ச்சல் வருவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை. கடந்த ஓராண்டாகவே பறவைக் காய்ச்சல் ஏற்படுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை கோழிப் பண்ணையாளர்களுக்கு தெரிவித்து வருகிறோம் என்றார் அவர். (ஐ)

# இந்தியா - பாகிஸ்தான் இடையே இரண்டாவது ரயில் சேவை ஆரம்பம்

எல்லைக் கோடுகளால் பிரிந்து கிடக்கும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் இரு நாட்டு மக்களையும் அவர்களது இதயங்களையும் இணைக்கும் இரண்டாவது ரயிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க 'தார் எக்ஸ்பிரஸ்' ரயில் சனிக்கிழமை முதல் ஓடத்தொடங்கியது. ராஜஸ்தானின் முனாபாவ் நகரிலிருந்து பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள கோக்ரபார் நகருக்கு அந்த ரயில் செல்கிறது. 41 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் சனிக்கிழமை ஓடத் தொடங்கிய அந்த ரயிலை ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத், சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முனாபாவ் ரயில் நிலையத்தில் கொடி அசைத்துத் தொடக்கிவைத்தார். அதில் இந்தியாவைச் சேர்ந்த 260 பயணிகள் சென்றனர். முன்னதாக, பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து வெள்ளிக்கிழமை இரவு 350 பயணிகளுடன் புறப்பட்ட அந்த ரயில் சனிக்கிழமை பகல் 1.50 இற்கு முனாபாவ் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. அதில் வந்த 350 பேரில் 150 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் ஆவர். (ஐ)

# தி.மு.க.கூட்டணியில் ம.தி.மு.க. நீடிக்கின்றதா? இல்லையா?



தி.மு.க.கூட்டணியில் ம.தி.மு.க. நீடிக்கின்றதா? இல்லையா? என்ற கேள்விக்கு உறுதியான பதில் இன்னும் கிடைக்கவில்லை. முக்கியமான இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ இன்னும் மௌனம் காத்துவருகின்றார்.

கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியும் எவ்வளவு தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றன என்ற விவரத்தை பெப்.15 இற்குள் கூட்டணியின் தலைவர் கருணாநிதியிடம் தருவது என பெப். 08 இல் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அந்தக் கெடுவுக்குள் பட்டியல் தந்தது பா.ம.கவும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும்தான். மற்றக் கட்சிகள் பட்டியல் தரவில்லை. இதில் காஸ்கிரஸ் பட்டியல் பெப். 25 இலும் இடதுசாரிகளின் பட்டியல் ஞாயிற்றுக்கிழமையும் தருவதாகக் கூட்டணித் தலைவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கெடுவுக்குள் பட்டியல் தராதது பற்றியோ, எப்போது பட்டியல் தரப்படும் என்பது பற்றியோ இன்னும் தகவல் தராதது ம.தி.மு.க. மட்டும்தான்.

கௌரவமான எண்ணிக்கையில் இடங்கள் வேண்டும். எவ்வளவுதான் நெருங்கியவராக இருந்தாலும் உபசரிப்பு சரியில்லை என்றால் நல்ல உபசரிப்பு இருக்கும் இடத்துக்குச் செல்ல நேரிடும் என்பது போன்ற கருத்துகளை வைகோ கூறியதால் அரசியல் வட்டாரத்தில் சந்தேகங்கள் எழுந்தன.

இதற்கிடையில் வைகோ, அ.தி.மு.க. அணிக்கு வரவேண்டும் என அதன் அவைத் தலைவர் கா.காளிமுத்து பகிரங்க அழைப்பு விடுத்தார். அதனால் ம.தி.மு.க. மீது சந்தேகம் அதிகரித்தது.

பெப்.14இல் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை வைகோ சந்தித்துப் பேசினார். அப்போது கூட்டணி பற்றியும் பேசியதாக ஊகங்கள் எழுந்தன.

பீகாரைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பாஸ்வான், மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் தனிக் கூட்டணி அமைத்து போட்டியிட்டார். இருந்தாலும், மத்திய ஆட்சியில் அங்கம் வகிக்கிறார். அதேபோல் தமிழகத்திலும் ம.தி.மு.க. தனி அணியில் போட்டியிடக்கூடும் அல்லது வேறு அணியில் போட்டியிடலாம் என்று பிரதமரிடம் வைகோ கூறியதாவும் செய்திகள் வெளியாகின.

இதுபற்றி கருணாநிதியிடம் சென்னையில் நிருபர்கள் சனிக்கிழமை கேட்டனர். ''அதைப்பற்றி எனக்குத் தெரியாது'' என்று அவர் கூறினார்.

தி.மு.க. அணியில் நீடிக்கின்றாரா இல்லையா பட்டியலை எப்போது தரப்போகிறார் என்பதை முடிவு செய்யும் பொறுப்பு வைகோ கையில் இருப்பதாகவும் கருணாநிதி சொன்னார்.

அவருடைய பேட்டி முடிந்ததும் நிருபர்கள் ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகம் வளாகத்துக்குச் சென்றனர். அங்கு அவர் இல்லை. கலிங்கப்பட்டிக்குச் சென்ற அவர் இன்னும் சென்னை வந்து சேரவில்லை என்று நிர்வாகிகள் தெரிவித்தனர்.

ஆனால், வைகோ சென்னையில்தான் இருக்கின்றார் என்றும் முதல்வர் ஜெயலலிதாவை போயஸ் தோட்டத்தில் சந்திக்கப் போகிறார் என்றும் செய்திகள் பரவின. உடனே நிருபர்களும் புகைப்படக்காரர்களும் அங்கு குவிந்தனர்.

சில மணி நேரம் காத்திருப்புக்குப் பிறகு கவனம் அப்பல்லோ மருத்துவமனைக்குத் திரும்பியது. காளிமுத்து அங்கு சிகிச்சை பெற்றுவருகின்றார். காளிமுத்துவைச் சந்திக்க வைகோ அங்கு செல்வதாகத் தகவல் பரவியது. எனவே, நிருபர்கள், புகைப்படக்காரர்கள் கூட்டம் அங்கு சென்றது. ஆனால், அங்கும் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

அவருடைய உதவியாளர்களையும் தொடர்புகொள்ள முடியவில்லை.

மாலையில் விசாரித்தபோது, வைகோ சென்னையில்தான் இருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் கூறின.

கருணாநிதியுடன் ஜன.26 இல் பேசிய போது எவ்வளவு தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ள ஆலோசிக்கப்பட்டது என்ற தகவலை வைகோ தெரிவிக்கவில்லை என்று கட்சியின் உயர்நிலை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

ம.தி.மு.கவின் நிலையை அறிந்துகொள்ள கூட்டணியில் உள்ள மற்றக் கட்சிகள் ஆர்வ

**கே.எம்.சந்திரசேகரன்**

மாக உள்ளன. ஒருவேளை ம.தி.மு.க. அணி மாறினால் தங்களுக்குக் கூடுதலாக 5 தொகுதிகள் கிடைக்கும் என அக்கட்சிகள் எதிர்பார்க்கின்றன.

இதுதவிர சிறிய அமைப்புகள் சிலவற்றை மேலும் அணியில் சேர்க்க முடியும்.

ஒருவேளை வைகோ விலகினால் ம.தி.மு.க. இழப்பை எப்படி ஈடுகட்டுவது என்பது பற்றியும் கூட்டணியில் ஆலோசனைகள் நடத்துவருவதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி சுவீகரித்தல்
## பிரதேச சபை, வேலணை

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட வங்களாவடிச் சந்தியில் உள்ள ஐந்தரை நிலப்பரப்பு (நிலப். 5 ½) காணி (பிரதான வீதியில்), மாதிரி சந்தை அமைப்பதற்காக சுவீகரிக்கப்படவுள்ளது.

எனவே, மேற்படி காணிக்கு உரிமை கோரவிரும்புபவர்கள் பிரசுர திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் ஆவணங்கள், மூல உறுதிகளுடன் சபைக்குச் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. நிலப்பரப்பு: 5 ½
2. மாவட்டம்: மாவட்டம் (தீவுப் பகுதி வேலணை கோயில்பற்று வேலணை கிழக்கிறை)
3. வட்டாரம்: 5 ஆம் வட்டாரம், வேலணை
4. வீதி: ஊர்காவற்றுறை வீதி

கை.மகேந்திரலிங்கம்
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.

(சி/47953) (18-16-17-24)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 10 . 1937 — மறைவு 11 . 02 . 2004

### அமரர் தம்பு கணேசபிள்ளை
(முன்னாள் அதிபர், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி)

கல்லகம் குடைந்த செவ்வேள்
கந்தன் ஓர் கருவதாகி
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளயர்யச்சூழ
பல்லுயிர்கு அருளைப் பூர்க்கும்
பல நெறி காயந்திட்டு அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
இருங்கனி உதவும் என்றும்
(கந்தபுராண விளக்கம்)

இந்தக் கனியை விரும்பி
மஞ்சவனப்பதி முருகன்
திருவடிக்கீழ் இருக்கும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மகன், மருமக்கள்,
உறவினர்கள்.

(46981) (51-16-17-24)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால்**
**யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு**
**வழங்கப்படும் கோதுமை மா வழங்கலுக்கான**
**கேள்வி கோரல்**
**ஏப்ரல், மே, ஜூன் -2006**

1) யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மா பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய மாதம் | அளவு |
|---|---|
| 2006 ஏப்ரல் | 400 Mt |
| 2006 மே | 400 Mt |
| 2006 ஜூன் | 400 Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00இனை யாழ். மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 20.02.2006ஆம் திகதி தொடக்கம் 28.02.2006ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப 10 மணிதொடக்கம் பி.ப 3 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

2) கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி -Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும் (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

3) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை **தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)** என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 01.03.2006ஆம் திகதி பி.ப 2 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றையதினம் பி.ப. 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4) நீள தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி"** என எழுதப்படவேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 % மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - **Performance Bond**) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6) கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து 30 நாள்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்**
தலைவர்/ அரசஅதிபர்
மாவட்ட கேள்விச்சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/47952) (53-16-17-24)

## வரணிப் பகுதியில் பட்டி மாடுகள் அபகரிப்பு

தென்மராட்சி கிழக்கு,பெப்.20

வரணிப் பகுதியில் பட்டிமாடுகள் இரவு வேளைகளில் களவு போவது அதிகரித்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் இரவு வேளைகளில் படையினர் நடமாடுவதால் பொதுமக்கள் நேரகாலத்துடனேயே வீடுகளில் முடங்கி விடுகின்றனர். இந்த அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தித் திருடர்கள் இரவுவேளைகளில் பட்டிமாடுகளைத் திருடி இறைச்சிக்காகக் கொண்டு செல்கின்றனர்.

இம்மாதத்தில் வரணி, மாசேரிப் பகுதியில் இரண்டு பட்டி உரிமையாளர்களின் பசுமாடுகள் திருடர்களால் இறைச்சிக்காகத் திருடப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு பசுமாடு கன்று ஈனும் நிலையில் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ-122)

## பனம் கள் விலை குறைப்பு

தென்மராட்சி,பெப்.20

பனம் கள் சீஸன் ஆரம்பித்திருப்பதை அடுத்து பனம் கள்ளின் விலை இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 28 ரூபா விற்கப்பட்ட ஒரு போத்தல் பனம் கள்ளின் விலை 26 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - தென்னம் கள்ளின் விலையில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## மிருசுவில் வடக்கில் சனசமூக நிலைய கட்டடம் திறப்பு

தென்மராட்சி கிழக்கு,பெப்.20

மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி ஸ்ரீ கணேசானந்தா சனசமூக நிலையத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட புதிய கட்டடம் தைப்பூசத் திருநாளில் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது இக்கட்டடம் முழுமையாகச் சேதமடைந்திருந்தது. இக்கட்டடத்துக்குரிய நிதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கியிருந்தார். (ஐ-122)

## தாய்மாருக்கான சத்துணவு முத்திரை

தென்மராட்சி,பெப்.20

தென்மராட்சிப் பிரதேச தாய்மாருக்கான சத்துணவு நிவாரண முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

2005 ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2006ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிவாரண முத்திரைகளே வழங்கப்படவுள்ளன.

முத்திரைகள் அந்தந்தப் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## நாய்களுக்குத் தடுப்பூசி

அரியாலை,பெப்.20

யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாய்களுக்கு விசர் நோய்க்குரிய தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு ரீதியாக இந்தத் தடுப்பூசி நாய்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றது.

தற்போது நிலவும் கடும் வெப்பம், வரட்சி காரணமாக நாய்கள் விசர்நோய்க்கு இலக்காகுவதைத் தடுக்கும் முகமாக சுகாதாரப் பிரிவினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த நடமாடும் தடுப்பூசி ஏற்றும் திட்டப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (ஐ-17)

**SMAK AGENT FOR SALE**

*Pine apple, mix fruit, Mango, Wood apple and Other fruits drinks.*

Contact : Wright Brother's (Nalliah)

தாமரைக்குளம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

T.P.: 021 2263694

(24-16-17)

## கௌரவ விருது வழங்கும் விழா





சாவகச்சேரி, பெரியமாவடி
அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தான பிரதான சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ கணேசலிங்கம் ஐயா வீரபத்திரக் குருக்கள்**
அவர்களுக்கு அவரது குருத்துவப் பணியைப் பாராட்டி
மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தாவும்
அடியார்களும் இணைந்து
**'கிரியா கலாபமணி'**
என்னும் சிறப்புப் பட்டத்தையும்
கௌரவ விருதையும் வழங்கிக் கௌரவிக்க இருக்கிறார்கள்.
இவ்விழாவில் அனைவரும் கலந்து குருவின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: ***மேற்படி தேவஸ்தானம்***
காலம்: **இன்று (20.02.2006) திங்கட்கிழமை**
சுபநேரம்: **முற்பகல் 11மணி – 12.30 மணிவரை**

சிவஸ்ரீ க.ஜெயக்குமார் குருக்கள் (கேருடாவில்),
ந.சொக்கலிங்கம் (மேற்படி ஆலய தர்மகர்த்தா),
சிவத்திரு. ஷ.கோபிஐயா (இருபாலை).

*விழா சிறக்க வாழ்த்துபவர்கள்:*
சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் (கலட்டி),
சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள் (வல்வை),
சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக் குருக்கள் (துவாளி).

(46989) (24-16-17)



**"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு"**
(ஏசாயா, 54:2)

## அடைக்கல கூடார் சபை - குருநகர்
## புதிய ஆலயப் பிரதிஷ்டை - ஆராதனை

காலம் : **இன்று (20.02.2006) திங்கட்கிழமை**
நேரம் : **முற்பகல் 10 மணி (பு.நே.)**
இடம் : **இல.47, 2ஆம் குறுக்குத் தெரு, கடற்கரை வீதிப் பக்கம்,யாழ்ப்பாணம்**

**" ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் - எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்-"**
(ஏசாயா, 55:1)

தகவல்: *சபை தலைமைப் போதகர்*
*ஸ்தாபகர்: S.J. பத்திநாதன்,*
*உதவிப் போதகர்கள்/ ஊழியர்கள், விசுவாசிகள்.*

(46990) (24-16-17)

## அழைப்புக் கட்டளை

*இல. 16 பிரிவு 55 (1)*

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்
கதிரவேலு - தில்லைநாதன் பெண் சுமதி
மே/பா திருமதி எம்.பாக்கியநாதர்
2, முருகன் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழக்கு இல. 631/D எதிராக

கதிரவேலு - தில்லைநாதன்
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தமக்கும் உமக்குமிடையேயுள்ள விவாகத்தை ரத்துச் செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2006ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகிறீர்.

*வரைவு*
**பவானி சற்குணராசா**
*வழக்காளியின் சட்டத்தரணி*

*நீதிமன்றக் கட்டளைப்படி*
**து.சிறீமோகன்**
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

*கையொப்பம்:* **து.சிறீமோகன்** பதிவாளர்.

*2006ஆம் ஆண்டு மாசி மாதம் 16ஆம் நாளாகிய இன்று*

(46977) (16-17-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு வாகனம் இல்லை: வைத்தியசேவை வழங்குவதில் பெரும் சிரமம்!

கரவெட்டி,பெப்.20

வடமராட்சிப் பகுதியில் உள்ள கால்நடை வைத்தியசாலைகளில் வாகன வசதிகள் இல்லாமையால் கால்நடைகளுக்கான வைத்தியசேவைகளை வழங்குவதில் சிரமம் எதிர்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் கால்நடை தொடர்பான சிகிச்சைகளை வழங்குவதற்கான பிரதம வைத்தியசாலை புலோலியிலும், அதன் கிளை ஒன்று கரவெட்டி நாவலர் மடத்திலும் இயங்கிவருகின்றன.

கால்நடைகள் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகின்றபோது அது தொடர்பாக சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமக்கு வாகன வசதிகள் இல்லை எனத்தெரிவித்து சிகிச்சை அளிக்க வருவதற்குப் பின்னிற்கின்றனர் எனக் கால்நடை வளர்ப்போர் தெரிவித்தனர்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கால்நடை வளர்போர் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகத் தெரிவித்தனர்.

எனவே, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போரின் நலனைக் கருத்தில்கொண்டு மேற்படி வைத்தியசாலைகளுக்கு வாகன வசதியை ஏற்படுத்திக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-6-70)

## அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிப்பு

தென்மராட்சி,பெப்.20

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி, பொலீஸாரால் கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் இந்தத் தண்டனையை விதித்தார்.

நாவற்குழிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (எ-117)


## கைதடியில் மாட்டுத்தொழுவம் அமைப்பதற்கு ரூ.10 ஆயிரம் நிதி உதவி

தென்மராட்சி,பெப்.20

கைதடிப் பகுதியில் மாட்டுத்தொழுவங்கள் அமைக்க சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மாடுகள் வளர்க்கும் பத்துப் பேர் தெரிவுசெய்யப்பட்டு தொழுவம் அமைக்க தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

தொழுவம் அமைக்க விரும்பும் கைதடிப் பிரதேச மக்களை விண்ணப்பங்களைச் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)



தைப்பூசத் தினத்தன்று யாழ். அப்பர் மன்றம் செல்லப்பா சுவாமிகள் வாழ்ந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில் நடத்திய திருமுறை முற்றோதலின்போது எடுத்த படம். (படம்: நல்லூர்ச் செய்தியாளர்)

## வடமராட்சியில் 11 கரையோரக் கிராமங்களில் தலா 50 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

செம்பியன்பற்று,பெப்.20

வடமராட்சிக் கரையோரக் கிராம மக்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அப்பகுதியைச் சேர்ந்த 11 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவற்றை அபிவிருத்திசெய்ய 'நெக்டெப்' நிறுவனம் முன்வந்துள்ளது.

கற்கோவளம், தும்பளை கிழக்கு, பருத்தித்துறை கிழக்கு, பருத்தித்துறை, வியாபரிமூலை, அல்வாய் வடமத்தி, பொலிகண்டி கிழக்கு, மேற்கு, வல்வெட்டித்துறை, வடமத்தி, வல்வெட்டித்துறை வடமேற்கு,கெருடாவில் தெற்கு ஆகிய கிராமங்களே இவ்வாறு அபிவிருத்திக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களின் தேவைகளை அறிந்து, அவற்றிற்குத் தலா 50 லட்சம் ரூபாவைச் செலவுசெய்ய 'நெக்டெப்' நிறுவனம் முன்வந்துள்ளது. (எ-36)

## அறுவடை காரணமாக விவசாயிகள் கூட்டம் ஒத்திவைப்பு

நவாலி,பெப்.20

நவாலியில் தற்போது நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருவதால் அங்கு நடைபெறவிருந்த விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் இரு மாதங்களுக்கு ஒத்திவைக்கபட்டுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-100)

## புத்தூர், ஆவரங்கால் பகுதி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் பெரும் ஆர்வம்

அரியாலை,பெப்.20

ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் இம்முறை வெங்காயச் செய்கை களை கட்டியுள்ளது. குறிப்பாக, விவசாயிகள் வெங்காயச் செய்கையில் தீவிர ஆர்வம் செலுத்திவருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள தோட்ட நிலங்களில் பயிரிடப்பட்டிருக்கும் வெங்காயப் பயிர்கள் நல்ல நிலையில் இருப்பதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கோப்பாய், நீர்வேலி, கரந்தன் பகுதிகளில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-17)

## ஆவரங்காலில் உணவகத்துக்கு 'சீல்'

அச்சுவேலி,பெப்.20

ஆவரங்கால் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கிய உணவகம் ஒன்று குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் சீர் செய்யப்படும்வரை இயங்கமுடியாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தயாபரன், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதாரச் சீர்கேட்டைச் சீர்படுத்தும் வரை உணவகத்தை மூடிவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (எ-111)

## சட்டவிரோத மது விற்பனையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

வலி.வடக்கு,பெப்.20

அராலி வடக்கு, அராலி கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மதுபான விற்பனையை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதிக் கிராம அலுவர்களைப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் பணித்துள்ளார்.

மேற்படி, இரண்டு கிராமங்களிலும் நடைபெறும் சட்டவிரோத மதுபான விற்பனை குறித்து இப்பகுதி மக்கள் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதிக் கிராம அலுவலர்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர் பணித்துள்ளார். (எ-175)




## வரணி படை முகாம்களில் பனை மரங்கள் தறிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

வரணிப் பிரதேசத்தில் பரவலாகப் படைமுகாம்கள் அமைந்துள்ள காணிகளில் உள்ள பனைமரங்கள், தென்னைகள் படையினரால் தறிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தறிக்கப்படும் பனைகள் முன்னிரவுவேளைகளில் டிராக்டர்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

அத்துடன், பனை வடலிகளிலும் தென்னைகளிலும் ஓலைகள் வெட்டப்படுவதால் அவையும் விரைவில் பயன்தராது பட்டுவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-122)

## கடற்றொழிலாளர் சங்கத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,பெப்.20

சாவகச்சேரி, பெரியமாவடி கடற்றொழிலாளர் சங்கத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனால் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சங்கத்திற்கு உரிய அலுவலகம் இல்லாததால் இத்தளபாடங்களைச் சாவகச்சேரி புனித ரிகோரியார் தேவாலய குழந்தையேசு முன்பள்ளிக்கு சங்கத்தினால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம்

வலி.மேற்கு,பெப்.20

வலி.மேற்குப் பிரதேச மட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வலி. மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கிராம அலுவலர்கள், கிராம அலுவலர்கள் பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு அங்கத்தவர்கள் உட்பட இன்னும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். அன்றைய தினம் 15 பேரைக் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறவுள்ளது. (எ-175)



இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் 'அன்பினால் ஒற்றுமை' என்னும் பெயரில் அமைதிச் செயற்றிட்டம் ஒன்றை அகில இலங்கையிலும் நடத்திவருகின்றது. இந்தச் செயற்றிட்டத்தின் குடாநாட்டுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் எடு[illegible] பிரம்மகுமாரிகள், இராஜயோக நிலையப் பிரதிநிதிகள், வலிகாமம் வலயக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரிய[illegible]படுகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

நாவற்குழி குடியேற்றத் திட்டத்தில் A-9 வீதிக்கு அண்மையில் 25 ஆம் இலக்க வீடும் வளவும் (கிணறும் உண்டு). உரும்பிராய் கற்புலம் வீதியில் கோப்பாய் வீதிக்கு அண்மையில் 5 பரப்பு காணியும் (கிணற் றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:222 5149 (இரவு 7மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். (46986)

திருநெல்வேலி முருகன் வீதிக்கு அண்மையில் 4½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவகாமி லொஜ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 0777111388, 0777176909. (46965)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தமா[illegible] முறையில் உடனுக்குடன் சுத்தம் [illegible] தினமும் பெற்றுக்கொள்ளலாம். 157, கண்[illegible] யாழ்ப்பாணம். (கச்சேரிக்கும், புங்கன்குளம் சந்திக்கும் இடையில்). (46997)

## வீடு விற்பனைக்கு

இராசாவின் தோட்ட வீதியில் நாவலர் வீதிக்கும் றக்கா வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (2பரப்பு) விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6219. (46053)

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு 3 அறை, இணைந்த குளியலறை கொண்டது. முற்றிலும் (Tiles ) பதிக்கப்பட்டது. சகலவசதிகளுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0773 114791, 021 222 6379. (46902)

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் நவாலி வீதியில் கிணற்றுப் பங்குடன்கூடிய பயன் தரும் மரங்கள் உள்ள வீடு வளவு (6பரப்பு) விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு T.P.:077 9789114. உடன் தொடர்பு கொள்ளவும் (47656)

## சகடை விற்பனைக்கு

இரும்புச் சில்லுடன் கூடிய நல்ல சகடை உடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு பரிபாலனசபை, வெள்ளைப்பிள்ளையார் ஆலயம், செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு. (47058)

## பந்தல் விற்பனைக்கு

50 அடி சொக்கட்டான் பந்தல், அதனுடன் கூடிய மணவறை, கதிரைகள், சமையல் பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சீ.மகாலிங்கம் (ராசன்), தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். T.P. 0776002626. (46944)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப திருவோணம், 1979 இல் பிறந்த மணமகன் பராமரிப்பு இல்லம், சுனாமியால் or போரினால் பாதிக்கப்பட்ட மணமகளை எதிர்பார்க்கின்றார். தொடர்பு: 18/1, கலட்டி அம்மன் கோயில் வீதி, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (47055)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை-நெல்லியடிக்கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக் கோட்டை, கரன் - ஆலடி- உடுவில், நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை யடி, நல்லூர். (சி-47786)

## IIS

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.02.2006
பிரிவு II : 22.02.2006 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால்
யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்
சிவப்பு நாட்டரிசி
வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2006 ஏப்ரல், மே, யூன் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ. கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழேகுறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2006 ஏப்ரல் (MT) | 2006 மே (MT) | 2006 யூன் (MT) |
| 1 | சாவகச்சேரி | 70 | 70 | 70 |
| 2 | கைதடி | 30 | 30 | 30 |
| 3 | கொடிகாமம் | 80 | 80 | 80 |
| 4 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 5 | கட்டைவேலி-நெல்லியடி | 15 | 15 | 15 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 15 | 15 | 15 |
| 8 | மருதங்கேணி | 20 | 20 | 20 |
| 9 | யாழ்ப்பாணம் | 75 | 75 | 75 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பழை | 60 | 60 | 60 |
| 17 | சங்கானை | 50 | 50 | 50 |
| 18 | சுன்னாகம் | 50 | 50 | 50 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 20 | 20 | 20 |
| 21 | ஊர்காவற்றுறை | 20 | 20 | 20 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 20-02-2006ஆம் திகதி தொடக்கம் 28-02-2006ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களை பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/=ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்புநாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களைத் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 01-03-2006 பி.ப.2 மணிக்கு முன்பாகச் சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு கேள்வி கள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் 'சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல்வேண்டும்.

08. கேள்விக் காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்வி களை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ. கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (A-47951) (39-11-45)

# பதவி வெற்றிடம்

பதவி: காப்புறுதி பிரதிநிதி

தகைமைகள்: மிகச்சிறந்த தொடர்பாடல் தகைமை அதிகளவு உழைக்கும் ஆர்வமும் இருத்தல் வேண்டும்.
G.C.E (O /L) இல் கணித பாடத்தில் சாதரரண சித்தி இருத்தல் வேண்டும்.

வெகுமதிகள்: கவர்ச்சிகரமான வருமான சந்தர்ப்பங்கள் மோட்டார் சைக்கிள்/ வாகனக் கடன் வசதி, இலவச ஆயுள் காப்புறுதி ஆயுள் காப்புறுதி மாதாந்த/ வருடாந்த போட்டிகள் பதவி உயர்வு வாய்ப்புகள்

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும்

சுயவிவரக் கோவைகளை 27.02.2006 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விளம்பர இல. 2809,
மே/பா. உதயன்.

(46982) (39-11-45)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னையா
துரைசிங்கம்

திதி: பஞ்சமி (20.02.2006)

மலர்வு
14.12.1937

உதிர்வு
08.03.2003

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
அப்பாவின் நினைவு
நெஞ்சை விட்டுப் போகாது

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

த.முகவரி:
கோண்டாவில் வீதி,
இருபாலைச்சந்தி.

நி.முகவரி:
நாவற்குழி, கைதடி.

(46987) (39-11-45)

# நன்றி நவிலல்



காரைநகர், நடுத்தெருவைச் சேர்ந்தவரும் டச்சு றோட் சண்டிலிப்பாயைப் வசிப்பிடமாகவும் கொண்ட
உயர் திரு.
ஆறுமுகநாதன்
பாலசுப்பிரமணியம்
(B.A.Hons, Advocate)

*அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, கடித மூலம் அனுப்பியவர்களுக்கும் 19.01.2006 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்தியம் ஆகியவற்றில்கலந்துகொண்ட உற்றார், சுற்றம், உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.*

திருமதி ஆ.பாலசுப்பிரமணியம் மற்றும்
குடும்பத்தினர்.

(46999) (39-11-45)

# மரண அறிவித்தல்



*இராஜசுலோஜனா ஸ்ரீதரன் (குஞ்சு)*

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசிப்பவருமாகிய திருமதி இராஜசுலோஜனா ஸ்ரீதரன் அவர்கள் 18-02-2006 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் சிவசுப்பிரமணியம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீதரனின் அன்பு மனைவியும் O.T. நடராஜா(கொழும்பு), O.T. செல்வராஜா (விவேகா பார்மசி), காலஞ் சென்ற O.T. ஆனந்தராஜா மற்றும் O.T. தர்மராஜா (கனடா), திலகவதி (கொழும்பு), காந்திமதி (ஆச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவளாம்பிகை (கொழும்பு), இந்திராணி (பெல்ஜியம்), ஜான்சிராணி, (டென்மார்க்), ஜமுனாராணி (ஜேர்மனி), சுதர்சினி (கொழும்பு), முரளிதரன் (பெல்ஜியம்), கிரிதரன் (கிரிஆட்ஸ்), சசிதரன் (வெஸ்லி கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கார்த்திகேயன், கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மொன்றியல், கனடாவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
O.T.செல்வராஜா (சகோதரன் - விவேகா பார்மசி)
காந்திமதி யோகநாதன் (ஆச்சி சகோதரி)

297, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(47054)(26-39-11-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரான்ஸ், ஜேர்மனி, ஈரானைத் தொடர்ந்து இந்தியா

# பல நாடுகளுக்கும் வேகமாக பரவுகிறது பறவைக் காய்ச்சல்!

லண்டன்,பெப்.20

உலக நாடுகள் பலவற்றை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஆள்கொல்லி பறவைக் காய்ச்சல் இப்பொழுது தனது அச்சம் தரும் பயணத்தை இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கும் விஸ்தரித்துள்ளது.

பறவைக்காய்ச்சலுக்கு மூலகாரணமாக விருக்கும் ' எச் 5 என் 1' நுண்கிருமி மிகப்பிந்திய நிலையில் இந்தியா, பிரான்ஸ் மற்றும் மத்திய கிழக்கில் ஈரான் போன்ற நாடுகளிலும் பரவியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஜேர்மனியிலும் இந்தக் கிருமி பறவைகளில் தொற்றியுள்ளது.

இந்தியாவின் மேற்குப் பகுதியில் பண்ணை ஒன்றில் இறந்துபோன ஆயிரக்கணக்கான இறைச்சிக் கோழிகளைச் சோதித்துப் பார்த்ததில் அவைகளுக்கு பறவைக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இப் பறவைகளிலிருந்து மனிதர்களுக்கும் பரவி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க எட்டுப்பேர் கொண்ட அதிகாரிகளின் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பிரான்ஸ் மற்றும் ஈரானிலும் பறவைகள் இறந்ததைத் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு பறவைக்காய்ச்சல் 'வைரஸ்' கிருமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான பறவைகளை கையாள்பவர்களுக்கும் இந்த நோய் பரவலாம் என்பதால் அவ்வாறான ஆள்களை பரிசோதிக்கும் நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால், இது வரை இந்த நாடுகளில் மனிதர்களுக்கு தொற்று பரவி இருப்பதாக எதுவும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த பயங்கர நுண்கிருமி வளர்ந்து மாற்றமடையுமானால் லட்சக் கணக்கான மனிதர்களைக் கொன்றொழிக்கும் நிலைக்குச் சென்றுவிடும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளார்கள்.

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பண்ணை ஒன்றில் 50 ஆயிரம் கோழிகள் இறந்ததைத் தொடர்ந்து பறவைக்காய்ச்சல் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், மனிதர்களுக்கு பரவியிருப்பதாக தெரியவரவில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அப்பிரதேசத்திலுள்ள சுமார் 5லட்சம் பறவைகள் தனியாக அப்புறப்படுத்த இருப்பதாக மாநில சுகாதார அமைச்சர் அனீஸ் அகமது தெரிவித்துள்ளார். (ப)



## பறவைக் காய்ச்சல் தொற்றி இந்தியாவில் ஒருவர் பலி!

அஹமதாபாத்,பெப்.20

பறவைகளில் இருந்து மனிதருக்குத் தொற்றும் 'எச் 5 என் 1' வைரஸ் கிருமியினால் முதலாது மரணம் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நிகழ்ந்திருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

குஜராத்தின் சுரத் மாவட்டத்தில் கோழிப் பண்ணை ஒன்றின் உரிமையாளரான கணேஷ் சோனாகர் என்ற 27 வயது நபரே உயிரிழந்தவராவார். இவர் குஜராத்தின் அண்டை மாநிலமான மகாராஷ்டிராவில் இருந்து குஜராத்துக்கு வந்திருந்த சமயமே உயிரிழந்திருக்கிறார்.

பறவைக் காய்ச்சல் கிருமி மனிதர்களுக்கு தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதை அடுத்து இந்திய அதிகாரிகள் உஷாரடைந்திருக்கிறார்கள்.குஜராத், மகாராஷ்டிரா எல்லை மூடப்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கோழிகளைக் கொன்று ஒழிக்க முழுவீச்சில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)



மகாராஷ்டிராவில் உள்ள ஒரு கோழிப்பண்ணை...

## நிலச்சரிவு அபாயம்: 11 கிராமங்களில் மக்கள் வெளியேற்றம்

கின்சாகன் (பிலிப்பைன்ஸ்), பெப்.20

கிழக்கு பிலிப்பைன்ஸ் பகுதியில் பெரும் நிலச்சரிவு ஏற்படக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளதால், அப் பகுதியில் உள்ள 11 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கின்சாகன் பகுதியில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் இரு கிராமங்கள் முற்றிலும் அழிந்தன. அதில் 1500 இற்கு மேற்பட்டோர் பலியாகிவிட்டனர். அதையடுத்து, அதே போன்ற நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் நிலவும் 11 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று லேதே மாகாண ஆளுநர் ரொசெட் லீரியா சனிக்கிழமை கூறினார். (ஐ)

### நபி 'கார்ட்டூன்' பற்றிய அமைச்சரின் கூற்றினால் சீற்றம்

# லிபியாவில் இத்தாலி தூதரகம் எரிப்பு! கலவரத்தில் பத்துப்பேர் உயிரிழப்பு!!

திரிபோலி,பெப்.20

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தி சித்திரம் வெளியிட்டதை எதிர்த்து லிபியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் இத்தாலி துணைத் தூதரகத்துக்கு தீ வைத்தனர்.

அப்போது மூண்ட கலவரத்தில் 10 பேர் பலியானார்கள்.

லிபியா தலைநகர் திரிபோலியில் இருந்து 640 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பெங்காஸி நகரில் இச் சம்பவம் நடந்தது.

அந்த நகரில் இத்தாலி துணைத் தூதரகம் முன்பு திரண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் துணைத்தூதரகத்துக்கு தீ வைத்தனர். பொலீஸார் தடுக்க முயன்றபோது கலவரம் மூண்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸாரை கற்கள், போத்தல்களை வீசித்தாக்கினர். பதிலுக்கு பொலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்தக் கலவரத்தில் பொலீஸார் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

நபிகள் 'கார்ட்டூன்' அச்சிட்ட 'ரீஷேர்ட் அணிவேன்' என்று இத்தாலி அமைச்சர் ராபெர்ட்டோ கால்டெரோலி சமீபத்தில் கூறியிருந்தார். அந்தச் செய்தி லிபிய பத்திரிகைகளில் பரவலாக வெளியாகி இருந்தது. இத்தாலி அமைச்சர் பேசியதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. அதன் எதிரொலியே இந்தக் கலவரம் என்று தோன்றுகிறது. (ஐ)

## நைஜீரியாவில் 16 பேர் பலி!

நைகர், பெப்.20

முஹம்மது நபியைக் கேலி செய்யும் வகையில் வெளியிடப்பட்ட கேலிச்சித்திரம் தொடர்பாக இடம்பெற்ற வன்செயல்களில் நைஜீரியாவில் 16பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் வட பகுதியில் இந்தக் கலவரங்கள் மூண்டன. (ஐ)

## உலக அரங்கில்

## முன்னாள் போராளிகள் மூவர் கொங்கோவில் பட்டினியால் சாவு!

லண்டன், பெப்.20

கொங்கோவில் அரச படைகளுடன் இணைத்துக் கொள்வதற்காக பயிற்றப்பட்டு வந்த முன்னாள் புரட்சியாளர்களான மூன்று முன்னாள் போராளிகள் பட்டினியால் உயிரிழந்துள்ளார்கள் என்று ஐ.நா.வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கொங்கோ ஜனநாயக குடியரசின் முன்னாள் 'மே-மே' போராளிகள் அரச படைகளில் இணைத்துக் கொள்வதற்காக கிழக்கு மாகாணத்தில் கமினா என்ற இடத்தில் பயிற்சியளிக்கப்பட்டு வந்தார்கள்.

பயிற்சி மையங்களில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு உணவும் பணக்கொடுப்பனவுகளும் போய்ச் சேருவதில்லை என்று ஐ.நா.அதிகாரிகள் பலசமயங்களில் குறை கூறி வந்துள்ளார்கள்.

2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஓர் அமைதித் தீர்வின்படி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த போராளிகள் அரச படைகளில் இணைத்துக் கொள்வதற்காகப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். இதன்படி 18 இராணுவப் பிரிவுகள் இந்த வருட நடுப்பகுதிக்குள் பயிற்றுவிக்கப்பட்டுவிட வேண்டும். ஆனால், ஆறு பிரிவுகள் மாத்திரமே செயற்படக்கூடிய அளவுக்கு பயிற்றப்பட்டிருப்பதாக ஐ.நா.அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இந்த வருடம் ஜூன் மாதம் அளவில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. பொதுத் தேர்தலையும் ஏப்ரலில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலையும் முன்னிட்டு 17 ஆயிரம் ஐ.நா.அமைதி காக்கும் படைகள் கொங்கோவில் ஆயத்தமாகி வருகின்றார்கள். (ப)

# 'கார்ட்டூன்' பிரச்சினை தீர சுமுகப் பேச்சு நடத்துக!

### பொதுநலவாய தலைவர் கோரிக்கை

காராச்சி,பெப்.20

நபிகள் நாயகத்தைக் கேலிச்சித்திரமாக வரைந்தது தொடர்பாக மன வருத்தம் அடைந்தவர்களும் மன வருத்தத்தை ஏற்படுத்தியவர்களும் அமர்ந்து பேசி சுமுகத் தீர்வு காணவேண்டும் என்று பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் தலைவர் டொன் மக்கினான் யோசனை தெரிவித்தார்.

கோடிக்கணக்கான மக்களின் மனங்களைப் புண்படுத்தி விட்ட இந்த விவகாரத்தை மேலும் வளர்க்காமல் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். டென்மார்க் அரசும் மக்களும் கூடஇந்த விவகாரத்தால் வருத்தம் அடைந்துள்ளனர்.ஒரு கேலிச்சித்திரக்காரரின் துடுக்குத்தனமும் அதை அனுமதித்த பத்திரிகை ஆசிரியரின் நடவடிக்கையும் இன்று உலகையே கவலைக்குள்ளாக்கியிருக்கிறது என்றார் மக்கினான்.

கராச்சி நகரில் ஆகாகான் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடந்த கூட்டத்தில் பேசுகையில் இக்கருத்தை அவர் வெளியிட்டார். பொதுநலவாய அமைப்பின் 53 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






# தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை பாகிஸ்தான் மூடிவிட வேண்டும்!

வாஷிங்ரன்,பெப்.20

தங்கள் நாட்டு எல்லைக்குள் செயற்பட்டுக்கொண்டிருக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளின் முகாம்களை மூட பாகிஸ்தான் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தியாவுடனான கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டை பாகிஸ்தான் அரசு மதித்து நடக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரிச்சர்ட் பௌச்சர் இதை வெளியுறவுத்துறைக்கான நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

பாகிஸ்தானில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளை ஒடுக்க அந்நாட்டு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்நாட்டுடன் நெருக்கமான தொடர்வு வைத்துள்ள அமெரிக்க அரசு அந்த வகையில் என்ன செய்கிறது என்று வெளியுறவுத்துறைக்கான நாடாளுமன்ற உறுப்பினர் குழுத்தலைவர் ரிச்சர்ட் லூகர் வினவினார். அவருக்குப் பதில் அளிக்கும் விதத்தில் பௌச்சர் மேற்கண்ட கருத்துகளைத் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா தம்பு



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் நக்கா ஒழுங்கையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தம்பு அவர்கள் நேற்று (19.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லமுத்து தம்பதியரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா தம்பு அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பா.ரத்தினேஸ்வரியின் அருமைத் தாயும் அ.பாலசுப்பிரமணியத்தின் அருமை மாமியும் ஷங்கர் (Triump International), சங்கீதா (இறுதி வருட மருத்துவபீட மாணவி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்ற குமாரசாமி, நவமணி (Singapoore), நடராசா, பரராஜசிங்கம்,அன்னபூரணி, செல்வ ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல.10, நக்கா ஒழுங்கையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, நக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (47065) (24-16-11)

தகவல்:
அ.பாலசுப்பிரமணியம்
(மருமகன்)

## திருமதி தேவலோஜினி மோகன்ராஜ்

(முன்னாள் உதவி விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

மட்டக்களப்பு, துறைநீலாவணையைப் பிறப்பிடமாகவும் 24, Archills st., Parlmersten North, New Zealandஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவலோஜினி மோகன்ராஜ் 17.02.2006 அன்று நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் செ.மோகன்ராஜ் (யாழ். மற்றும் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் கணித விரிவுரையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் அர்ச்சனா, மாதங்கி ஆகியோரின் அன்புத் தாயும் திரு.திருமதி வேலாயுதம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் கோகுலன், சத்தியபாமா, வேந்தன் ஆகியோரின் சகோதரியும் சின்னப்பா வீதி, நவாலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற த.செல்வராசா மற்றும் புத்தினிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மருமகளும் தவராஜா (North sea Ltd.) , ஜெயராஜா (U.K.), விஜயராஜா (France), Dr.பத்மராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர் - விவசாய விஞ்ஞானம், பேராதனை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் துறைநீலாவணையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
துறைநீலாவணை,
மட்டக்களப்பு.
067 222 3239 (47008) (24-16-45)

தகவல்:
செ.தவராஜா
சின்னப்பா வீதி, நவாலி.
0779231866

## யாழ். நகரில் பொலீஸார் வாகனப் பரிசோதனை

அரியாலை,பெப்.20

யாழ்.நகரை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் பொலீஸார் வாகனங்களின் ஆவணங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தை அவதனிக்கமுடிந்தது.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்தவர்கள் மற்றும் இதர ஆவணங்கள் இன்றி பயணித்தோரும் இந்தப் பரிசோதனையின் போது சிக்கிக்கொண்டனர்.

பொலீஸாரின் இந்த வாகனப் பரிசோதனை நடவடிக்கைக்கு படையினர் பாதுகாப்பு வழங்கினர். (எ-17)

## கோப்பாய் சுகாதாரப் பணிமனைக்கு பதில் வைத்திய அதிகாரி

கோப்பாய் பிரதேச பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி முதல் டாக்டர் எஸ்.ஜமுனானந்தா பணிகளை நிறைவேற்றி வருகின்றார்.

இவர் யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பதிகாரியாகத் தற்போது கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-72)


## தேவை

எமது கடைக்குப் பின்வரும் வேலைகளுக்கு ஆள் தேவை.

1. 45 வயதுக்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த பில் கிளார்க்
2. ரீ.மேக்கர் 3. சப்ளையர்

தொடர்பு: சரஸ்வதி விலாஸ்
இல. 195, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(47059) (24-16-45)

## விற்பனைக்கு

அரிசி ஆலை உரிமையாளருக்கு

ஸ்ரீம் பொயிலர் விற்பனைக்குண்டு.
நாள் ஒன்றுக்கு 100 மூடை நெல்லை நீராவியில் அவிக்கக்கூடிய பாவனையில் உள்ள தரமான பொயிலர் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: T.P.: 021 226 4109
0776441991
(சி/47960) (24-16-45)


## சாவகச்சேரி இந்துவின் மெய்வன்மைப்போட்டி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (எ-203)

## சரசாலை தெற்கில் மலசலகூடம் நிர்மாணம்

சாவகச்சேரி, பெப்.20

சிறுவர் பாதுகாப்பு நிதியமும், அறவழி நிலையமும் இணைந்து மட்டுவில் சந்திரபுரம், சரசாலை தெற்கு ஆகிய கிராமங்களில் மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளன.

சந்திரபுரம், சரசாலை தெற்கு கிராமத்தில் அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை நிலையைப் பகுப்பாய்வு செய்தபொழுது அங்கு சிறுவர்களும், பெற்றோர்களும் பெரும் பாதிப்புக்குள்ளனது கண்டறியப் பட்டதையடுத்து இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப் பட்டது.

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதியில் 25 மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டதுடன், சரசாலை தெற்குப் பகுதியில் 44 மலசலகூடங்கள் புனரமைக்கப்பட்டும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-51)


## சட்டக் கல்லூரி நுழைவுப் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

இவ்வருடம் புரட்டாதி மாதம் நடைபெற இருக்கும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன. போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்கள் சட்டக் கல்லூரி அனுமதியைப் பெறுவர். சட்டக் கல்லூரியில் மூன்று வருட கற்கை நெறியை பூர்த்தி செய்து தேர்ச்சி பெறுபவர்கள் இலங்கை உயர் நீதிமன்றத்தின் முன் சட்டத்தரணிகளாக சத்தியப் பிரமாணம் செய்ய அனுமதிக்கப்படுவர். நுழைவுப் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகமைகள்

- G.C.E. O/L பரீட்சை ஆங்கிலம் திறமைச்சித்தி (C)
- G.C.E. A/L பரீட்சை பழைய பாடத்திட்டமாயின் 4 பாடங்களில் சித்தியும், புதிய பாடத்திட்டம் ஆயின் 3 பாடங்களில் சித்தியும் அவசியம்

பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் 03.03.2006 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

CATWAS
#26, Somasundram Avenue,
Chundukuli, Jaffna.
T.P. (094) 021 222 3805
E-Mail: catwasomi@sltnet.lk

இலவசமாக நடைபெறும் கலந்துரையாடல் அழைக்கின்றோம்
காலம் :- 05.03.2006
நேரம் :- மு.ப 9:30
இடம் :- "Thodarpaham" #657,Hospital Road Jaffna.


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி தங்கராணி



கலைமகள் வாசம், அல்வாய் வடமேற்கு, அல்வாயைச் சேர்ந்த கந்தசாமி தங்கராணி அவர்கள் நேற்று (19.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி பொன்னுத்துரை - தங்கச்சியம்மா (அமரர்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் கணபதி கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புத் துணைவியும் நக்கீரன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்), குமணன், திருமதி சுகுணராஜா கலைமகள் ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி ந.மலர்விழி (லண்டன்), திருமதி கா.அனுஷா (லண்டன்), செ.சுகுணராஜன் (குணா பெல் நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு மாமியும் திருமதி செ.ரதி, ராதா (ராதா எலெக்ரிக்கல்ஸ் - கிளிநொச்சி), ஸ்ரீதாஸ் (தாஸ் வைண்டிங் - மந்திகை), வரதன் (லண்டன்), திருமதி ம.வாசுகி, திருமதி இ.அங்கையற்கண்ணி (சுவிஸ்), பார்த்திபன் (பனை அபிவிருத்திச் சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் க.செல்வரட்ணம் (V.K.S. நெல்லியடி), சு.மகேஸ்வரன் (மதுரன் கிறா(F)பிக்ஸ்), ச.இரகுநாதன் (சுவிஸ்), திருமதி ரா. செல்வராணி, திருமதி ஸ்ரீ.கலாவதி, திருமதி வ.ஜெயந்தி (லண்டன்), திருமதி பா.கவிதா, க.செல்வமாணிக்கம் (அமரர்), திருமதி சி.செல்வநேசம், திருமதி சி.வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ந.நக்ஷன், ந.நதோஷ், ந.நிதுஷன், கா.தாரணி, சு.சஜினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வாசம்,
அல்வாய் வடமேற்கு.
021 2263099 (47063) (24-16-45)

- குடும்பத்தினர்.


## GTZ - NRP / REPSI

gtz

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம்

எமது உட்கட்டமைப்பு நிர்மாண வேலைகள் நடைபெறும் யாழ்ப்பாணம், மருதங்கேணி, முல்லைத்தீவு பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கு ஆற்றலும் ஊக்கமும் அர்ப்பணிப்பும் உள்ள இளம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகிறார்கள்.

தகுதியுடைவர்கள் பின்வரும் திகதி, நேரம், நிலையங்களில் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.

| திகதி | நேரம் | நிலையம் |
|---|---|---|
| இன்று (20.02.2006) | பிற்பகல் 1 மணி | ஜி.ரி.இசற். அலுவலகம், 260ம் கி.மீ. A-9 வீதி, பரந்தன். |
| நாளை (21.02.2006) | பிற்பகல் 1 மணி | ஜி.ரி.இசற். அலுவலகம், 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |

பிரதம ஆலோசகர்,
ஜி.ரி.இசற். வடபுனரமைப்புத் திட்டம். (சி/47961) (24-16-45)

## "எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்"

மீண்டும் குடும்பத்துடன் சிங்கப்பூர் சென்றுவர

இரண்டு பேருக்கு 57000/= } +வரி
மூன்று பேருக்கு 94800/= } +வரி

இவற்றுள் உள்ளடங்குபவை

- இருவழி விமானச்சீட்டு
- நட்சத்திர ஹொட்டலில் தங்குமிட வசதி காலை உணவுடன்

- கொழும்பு → கனடா → கொழும்பு 99000/= +வரி
- கொழும்பு → கனடா 55000/=+ வரி
- கொழும்பு → லண்டன்→ கொழும்பு 48000/= +வரி
- கொழும்பு → லண்டன் / கொழும்பு → பரிஸ் / கொழும்பு → பிராங்பேட் 38000/= +வரி

கொழும்பு → பாங்கொங் → கொழும்பு 25500/=
கொழும்பு → டோகா, 10800+வரி

56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

TEL: 021 222 3771, 0777915824 E-mail aitkenspence jf @ sltnet. lk

(சி/47966) (51-24-16-45)

உங்கள் நம்பிக்கையான பயண நிறுவனம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தில் இணையப்போவதும் இல்லை அமைச்சுப் பதவி ஏற்கப் போவதும் இல்லை

## அடித்துக் கூறுகிறார் யோகராஜன்

கொழும்பு,பெப்.20

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணையப் போவதில்லை, அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதுமில்லை. நான்கு வருடங்கள் தொடர்ந்து ஆட்சியில் இருக்கப்போகின்ற அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது மக்களுக்கு எதையாவது பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மத்திய மாகாணத்தில் மட்டும் அரசுடன் இணைந்து போட்டியிட முடிவெடுத்தது.

அதற்காக இ.தொ.கா. அரசுடன் இணையப் போகிறது என்றோ அல்லது அமைச்சுப் பதவிகளைப் பெறப்போகிறது என்றோ அர்த்தமில்லை."

- இவ்வாறு இ.தொ.காவின் பிரதித் தலைவர் யோகராஜன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மத்திய மாகாணத்தில் அரசுடன் இணைந்து போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் அரசில் அமைச்சுப் பதவிகளை பெறவிருக்கின்றன என்று நேற்று செய்திகள் வெளியாகி இருந்தன.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், இ.தொ.காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முத்துசிவலிங்கம் மற்றும் முருகன் சச்சிதானந்தன் ஆகியோர் அமைச்சர்களாக நியமனம் பெறப்போகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இது பற்றி இ.தொ.காவின் பிரதித் தலைவர் ஆர். யோகராஜனிடம் நேற்று கேட்டபோதே அவர் மறுப்புத் தெரிவித்தார்.

யோகராஜன் மேலும் கூறியதாவது -

"எமது மக்களுக்கு சேவைசெய்யும் நோக்கில் நாம் இந்தத் தேர்தலில் ஒரு வியூகத்தை விடுத்தோம். அதன்படி மத்திய மாகாணத்தில் மாத்திரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் அரசுடன் இணைந்து போட்டியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானம் மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு வகையான அரசியல் காய் நகர்த்தலே தவிர அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறும் தீர்மானம் அல்ல.

எமது இத்தீர்மானத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டு நாம் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் எந்தவித உண்மையும் கிடையாது.

தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு இந்த அரசுதான் ஆட்சியில் இருக்கப் போகிறது.

இந்தக் காலப்பகுதியில் எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டியவைகளை நாம் இந்த அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காகவே நாம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்த ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானித்தோம்.

மாறாக அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறப்போகிறோம் என்ற செய்தியில் எந்த உண்மையும் இல்லை. நாம் அவ்வாறு இணையப்போவதுமில்லை" - இவ்வாறு அவர் கூறினார். (க-3)

## நூலகக் கண்காட்சி ஞாயிறுவரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.நூலகத்தில் இடம்பெற்று வரும் நூல்களின் கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவிருக்கின்றது.கடந்த வெள்ளிக்கிழமை முதல் இன்றுவரை இக்கண்காட்சி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையானவர்கள் கண்காட்சியைப் பார்வையிட வருவதால், எதிர்வரும் ஞாயிறுவரை கண்காட்சியை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (3)

## ஆர்.பி.ஜி.கண்டுபிடிப்பு

காத்தான்குடி, பெப்.20

பாரிய ஆர்.பி.ஜி. மோட்டார்குண்டு ஒன்றினை காத்தான்குடி பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். நேற்றுக் காலை 6.45 மணியளவில் காத்தான்குடி வாவிக்கரையோரம் தேடுதல் நடத்தியபோதே இந்த மோட்டார் குண்டு சிக்கியது.

காத்தான்குடி பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட விசேட குண்டு செயலிழக்கச் செய்யும் படையினரால் இந்த மோட்டார்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடிய இத்தகைய மோட்டார்களை, விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மாத்திரமே பயன்படுத்துகின்றனர் என்று படையினர் தெரிவித்தனர். (க-3)


**BARATHY**
**சித்தன்கேணி**

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர்
திரு. K.K. மோகன் (Dip.in.Tea)

புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
செவ்வாய், வியாழன் - 3.45 p.m.
சனி, ஞாயிறு - 2.30 p.m.

குறிப்பு:-
* ஒவ்வொருமாதமும் இரு பரீட்சைகள் நடைபெறுகின்றன.
* மாணவர்களின் கற்றலுக்கு வசதியாக பயிற்சிப்புத்தகங்களும்வழங்கப்படுகின்றன.

இதுவரை அனுமதிபெறாத மாணவர்களுக்கு 21.02.2006 இல் இருந்து உங்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். (47073)

**படிவம்**

உள்நாட்டு இறைவரித் திணைக்கள வரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி
15.03.2006

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

**AIMS**
#118, Palaly Road, Jaffna.

பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.02.2006
பிரிவு II : 22.02.2006
பகல் 10.00மணி

அனைத்து கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்
AIMS, யாழ்ப்பாணம்


### கண்ணீர் அஞ்சலி

எமது பீட 3ஆம் வருட மாணவி I.Keturah
அவர்களின் அன்புத் தந்தை

**Rev.M.M. இன்பரூபன்**

அவர்கள் காலமானதையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (25-34-12) (க-47967) 16ஆம் அணி மாணவர்கள்.

### கண்ணீர் அஞ்சலி

எமது பீட 3ஆம் வருட மாணவி I.Keturah
அவர்களின் அன்புத் தந்தை

**Rev.M.M. இன்பரூபன்**

அவர்கள் திடீர் மரணம் அடைந்ததையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களின் துயரில் பங்கேற்றுக்கொள்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (25-34-12) (47074) விவசாய பீட மாணவர் ஒன்றியம்.

### கண்ணீர் அஞ்சலி

எமது அணி மாணவி I.Keturah
அவர்களின் அருமைத் தந்தை

**Rev.M.M. இன்பரூபன்**

அவர்கள் காலமானதையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

14ஆம், 15ஆம் அணி மாணவர்கள்.
யாழ்.பல்கலைக்கழகம். (25-34-12) (47075) விவசாய பீடம்

### கண்ணீர் அஞ்சலி

**M.M. இன்பரூபன்**

யாழ்ப்பாணம் சியோன் தேவாலய உதவிப் போதகர் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார். அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்துகின்றோம்.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (47071) (25-34-12) மேசியா நகை மாடம்.


**நாகம்ஸ் சுன்னாகம்**

விஜய், திரிஷா நடித்த
**ஆதி**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00.7.00

**ராஜா யாழ்ப்பாணம்**



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
நேரம்: பு.நே. 10.30, 2.15,மட்டும்
24 முதல் சத்தியராஜ், சிபிராஜ், நமீதா.
**கோவை பிரதர்ஸ்**
பு.நே. 10.30, 1.30,4.30

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**

அக்ஷன் கிங் அர்ஜுன், கஜாலா, விவேக் நடித்த
**மதராஸி**
புதியநேரம்: 10.00, 1.00, 4.00


## மரண அறிவித்தல்கள்

### போதகர் M.M.இன்பரூபன்

**(சியோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் M.M. இன்பரூபன் அவர்கள் நேற்று (19.02.2006) ஞாயிற்றுக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
போதகர் J.K.பிலிப் (சியோன் தேவாலயம்).
129, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (47069) (25-34-12)

### செல்லையா செல்வகுமாரன்

**(ஐங்கரன் ஹாட் வெயர்ஸ் உரிமையாளர், சித்தன்கேணி)**



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வட்டு. வடக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வகுமாரன் 18.02.2006 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் மார்க்கண்டு - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் பவதாரணியின் அன்புத் தந்தையும் உதயகுமார், ரவிக்குமார், மீரா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரின்பநாயகம், சிவசங்கர், தங்கமயில், அருச்சுணராசா, கிளி, நவமலர், அபூர்வசிந்தாமணி, தனபாலசிங்கம் (குஞ்சன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மடத்துப்பிள்ளையார் கோயிலடி, தொல்புரம் என்னும் முகவரியில் இன்று (20.02.06) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.தனபாலசிங்கம் (குஞ்சன்)
மகாலட்சுமி பல்பொருள் வாணிபம்
மடத்துப் பிள்ளையார் கோயிலடி,
தொல்புரம்.
(47072) (25-34-12)

### வேலுப்பிள்ளை நவரட்ணம் (யோகம்)

**(ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்.)**



அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட கந்தர் வேலுப்பிள்ளை நவரட்ணம் (யோகம்) அவர்கள் 16.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மகனும் தம்பி ஐயா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் தங்கச்சிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் இராசரட்ணம், சிவபாக் கியம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுலோசனாதேவி, ஸ்ரீசச்சிதானந்ததாசன் (ஜேர்மனி), கோகிலா (நோர்வே), வாசுகி (லண்டன்), உமா, வானதி (ஜேர்மனி), கௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராஜா, இளங்கோவன் (லண்டன்), காலஞ்சென்ற இராசநாதன் மற்றும் உமாதேவா (சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்), சிவராஜா (ஜேர்மனி), விமலேஸ்வரி (ஜேர்மனி), பாலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனும் கோகுலராஜ் (நோர்வே), பிரதீஸ் (லண்டன்), துஷ்யந்தன் (நோர்வே), கோமதி (லண்டன்), சதீஸ்வரன் (புனித பத்திரிசியார் கல்லூரி), விஜிதா (பிரான்ஸ்), சங்கரி (பிரான்ஸ்), தயாஸ்வரன் (புனித பத்திரிசியார் கல்லூரி), செந்தூரன் (பிரான்ஸ்), உசா (பிரான்ஸ்), காயத்திரி (ஜேர்மனி), யசோதன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் டன்சிதா, நிசா (நோர்வே) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
369, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (25-34-12) (47068)

### திருமதி கிறிஸ்தோப்பிள்ளை திரேசம்மா



ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்தோப்பிள்ளை திரேசம்மா அவர்கள் நேற்று (19.02.2006)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பிள்ளை பொன்னுத்துரையின் மனைவியும் தோமஸ் (டென்மார்க்), காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லஸ் (ஸ்கந்தபுரம்), காலஞ்சென்ற செல்லா,றாயேஸ்வரி (பாண்டியன் தாழ்வு), மேரிஸ்ரெலா(நாரந்தனை), மேரிபிலோமினா (நாரந்தனை),மேரிஅசுந்தா(மலர்-பாண்டியன்தாழ்வு), குணம் (ஜேர்மனி), இந்திரன்(இராசநாயகம்-மசு பல்பொருள் வாணிபம்,கிளிநொச்சி), பாலு(குவைத்), பீற்றர்போல்(நாரந்தனை)ஆகியோரின் பாசமிகு தாயும் பற்றிக், கமலநாதன், ஜான்சன், றெக்ஸ், சறோஜினிதேவி, றஞ்சினி, வனிதா, சின்னம்மா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2006 ) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோயிலில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திரன் (மகன்), பிள்ளைகள், மருமக்கள்.
இல. 57, கொழும்புத்துறைவீதி, பாண்டியன்தாழ்வு,யாழ்ப்பாணம்.
T.P: 077 6026574 (47070) (25-34-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாப் பேச்சுகளின்போது செய்தியாளர்களுக்கு வரையறை

## சுவிஸ் அரசு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

ஜெனீவா, பெப்.20

சுவிற்ஸர்லாந்தின் தலைநகர் ஜெனீவாவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இந்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு செய்தியாளர்களே அனுமதிக்கப் படவுள்ளனர்.

சுவிஸ் அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக இதனை அறிவித்துள்ளனர். ஜெனீவாவில் இருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சரியோடி பொஸ்கோவில் அமைந்துள்ள கிறிஸ்தவ கற்கை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் பேச்சு நடைபெறவுள்ளது.

புதன்கிழமை பேச்சு ஆரம்பமாகும் அன்று பத்திரிகையாளர் சந்திப்பும் இடம் பெறும். எனினும் இச்சந்திப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட செய்தியாளர்களே அனுமதிக்கப் படுவர்.

மறுநாள் வியாழக்கிழமை பேச்சு முடிவடைந்த பின்னரும் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்படும். அதிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பத்திரிகையாளர்களே அனுமதிக்கப்படுவர்.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டுள்ள பத்திரிகையாளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று சுவிஸ் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பேச்சு நடைபெறும் இடத்திற்குப், பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்வதற்கு போக்குவரத்து வசதி களும் ஜெனிவா செய்தியாளர் கழகத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-3)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை தம்வசம் என்கிறது ஈ.பி.டி.பி.

## நேற்று அந்த அமைப்பினர் அறிக்கை

கொழும்பு,பெப்.20

அரச கட்டுப்பாடற்ற பகுதியான முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கீழ் வந்துள்ளதாக அக்கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இம்முறை உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் அரச கட்டுப்பாடற்ற பகுதியான முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிர்வாகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்கீழ் வந்துள்ளது.

மேற்படி பிரதேசசபைக்காக புலிகள் இயக்கத்தினர் சுயேச்சைக்குழு சார்பில் தமது முகவர்களைக் கொண்டு தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருவதுடன், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகம் ஏகமனதாக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.) யின் கீழ் வந்துள்ளதாக வவுனியா மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் தொலைநகல் மூலம் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அறிவித்துள்ளார்.

செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்தபோது அரச கட்டுப்பாடற்ற கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் உள்ள 119 இந்து ஆலயங்கள் மற்றும் மத நிறுவனங்கள், பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள், சமூக அமைப்புகள் ஆகியவற்றின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பல கோடி ரூபா நிதி உதவிகளை வழங்கியிருந்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் என்ற வகையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அடை மழை காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணங்களுக்காக அடிப்படை அத்தியாவசியப் பொருட்கள் உட்பட தண்ணீர் கொள்கலன்கள் பலவற்றை முதற்கட்ட உதவியாக அனுப்பி வைத்திருந்தார்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)

# புலிகளின் ஆயுத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு பகுதி கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த - அமெரிக்காவிடம் அண்மையில் வாங்கிய கரேஜஸ், எஸ்.எல்.என்.எஸ். சமுத்ரா ஆகியவையும் திருகோணமலை கடற் படைத்தளத்திலிருந்து தரணதீர, ரணஜெய ஆகிய பீரங்கிப்படகுகள் இரண்டு டோரா படகுகளுடனும் இந்தியாவிடம் வாங்கிய எஸ்.எல்.என்.எஸ். சரயு இரண்டு டோரா படகுகளுடன் கொழும்பு கடற்படைத்தளத்திலிருந்தும் ஸ்ரீலங்காவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள கிரிந்த ஆழ்கடல் பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள விரைந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை முதல் நடத்திய தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கையில் எந்தக் கப்பலையும் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் தேடுதல் பணியிலிருந்து ஒரு டோரா படகு மட்டும் நேற்று கரை திரும்பியுள்ளதாகவும் மீதி கடற்கலங்கள் ஆழ்கடலில் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தரையிலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகள் மற்றும் ஆயுத தளபாடங்களை தென்னாசிய நாடு ஒன்றிடமிருந்து விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர் என்று அண்மையில் ஸ்ரீலங்காவுக்கு கிடைத்த தகவலை அடுத்து இக்கப்பல் தொடர்பான தகவலும் கிடைத்திருப்பததால் இதுதொடர்பில் மிகவும் அவதானமாக செயற்படவுள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (3)

# பேசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப் படுகிறது. இதனையடுத்து இந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடையை இந்திய அரசு விலக்கிக்கொள்ள வேண்டும்.

✱ பலஸ்தீனம் போன்ற தேசங்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்திருப்பது போல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்.

✱ இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாகக் கொண்ட சிங்கள அரசு, தமிழீழத்தின் அமைதியைக் குலைக்கும் வகையில், தமிழீழ மக்கள்மீது போர்தொடுக்கத் திட்டமிட்டு முயற்சிகளைச் செய்துவரும் நிலையில் சிங்கள அரசுக்கு இந்திய அரசு எந்தவகையிலும் உதவக்கூடாது.

✱ தமிழீழ விடுதலைப் புலிகளை அச்சுறுத்தும் வகையில் ஜனவரியில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்ரெட் பேசியிருப்பது தமிழீழத்தில் அமெரிக்க வல்லாதிக்கத்தின் தலையீட்டை வெளிப் படுத்துகிறது. அதனை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆகிய தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (க-3)

# ஐ.தே.க வேட்பாளர் தாக்கப்பட்டார்

புத்தளம், பெப்.20

புத்தளம் மாவட்டத்திலுள்ள ஆனமடுவ பிரதேசசபைக்கு போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பிரேமசிறி முனசிங்க நேற்று முன்தினம் இனந்தெரியாத சிலரினால் தாக்கப்பட்டார்.

மஹகும்புக்கடலய என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுபற்றி முந்தல் பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (256)

# அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் அமைதிப் பேச்சுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச பேச்சுக்குழு உறுப்பினர்களைப் பணித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (க-3)

# கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

அந்தப் பொதியில் 2 கிளைமோர்கள், 3 கிரனேட்டுகள், டெட்டனேட்டர் ஒன்று மற்றும் வயர் ஒரு தொகுதி என்பன அடங்கியிருந்தன என்று சாலியவெலப் பொலீஸார் தெரிவித்தனர்.

குறித்த தனியார் பஸ் மற்றும் வெடி பொருள்கள் என்பன சாலியவெலப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. எனினும், வெடி பொருள்கள் யாரால் எடுத்துவரப்பட்டன என்பதோ, அது எந்த நோக்கத்துடன் எடுத்துவரப்பட்டன என்பதோ தெரியவரவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதி, நடத்துநர் மற்றும் பயணிகள் என 49 பேர் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் அவர்கள் விசாரணை செய்யப்பட்டனர் என்று சாலியவெல பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-3)

# யுத்தநிறுத்த உடன்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சுகளின்போது சமர்ப்பிப்பதற்காக மீளாய்வு செய்யப்பட்ட - திருத்தங்கள் அடங்கிய - புரிந்துணர்வு ஒப்பந்த நகல் ஒன்றை இலங்கை அரசுப் பிரதிநிதிகள் எடுத்து வருகின்றனர் எனக் கொழும்பில் வெளியான செய்திகள் குறித்துக் கேட்டபோதே புலிகளின் பேச்சுக் குழுத்தலைவர் மேற்கண்டவாறு திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

தாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு அதிகாரத்துக்கு வந்தால், இலங்கை நாட்டின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கும் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றியமைப்பார் என்று தாம் ஜே.வி.பியுடன் செய்த ஒப்பந்தத்திலும், தமது தேர்தல் விஞ்ஞாபனமான 'மஹிந்த சிந்தனை'யிலும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவிப்பது என்றும், இலங்கை அரசமைப்புக்கு முரணானது என்றும் தாமே விமர்சித்த உடன்பாட்டை இப்போது அப்படியே செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதற்குத் தாமே இணங்குவது என்பது, நாட்டின் இறைமைக்கும் அரசமைப்பிற்கும் முரணாகச் செயற்படத் தாமே உடன்படுவதாக அமையும் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்கு உணர்ந்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இதனால், ஜே.வி.பியுடனான தமது ஒப்பந்தத்தையும், தமது 'மஹிந்த சிந்தனை' என்ற தேர்தல் விஞ்ஞாபனக் கருத்தையும் நிறைவேற்றும் வகையில் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து, திருத்தும் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்தர் முன்னெடுக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இதற்கான சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா தலைமையில் மூத்த சட்ட அறிஞர்கள் குழாம் மூலம் தயாரித்த - மீளாய்வு செய்யப்பட்ட - புரிந்துணர்வு ஒப்பந்த நகல் ஒன்றை ஜெனீவாப் பேச்சின் போது சமர்ப்பிக்கவென ஜனாதிபதி மஹிந்தரின் அரசு தயாராகியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அது குறித்துக் கேட்டபோதே அப்படியான ஒரு விடயம் குறித்து ஜெனீவாப் பேச்சில் ஆராய்வதற்கே இடமில்லை என்று மதியுரைஞர் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

''இலங்கை அரசின் பிரதிநிதிகளும், புலிகளின் பிரதிநிதிகளும் நீண்டகாலம் கலந்துரையாடி அனுசரணையாளர்கள் மூலம் கருத்துப் பரிமாறி அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டதே இந்த ஒப்பந்தம். இதை மாற்றியமைப்பது அல்லது மீளாய்வு செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்தகைய கோரிக்கை எதையும் ஏற்றுப் பரி சீலிக்கவோ - அல்லது கவனத்தில் எடுக்கவோ - கூட நாம் தயாரில்லை.

''தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்தல் குறித்து பேசுவதற்கான அனுமதி மாத்திரமே எமக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது இயக்கத் தலைமை எமக்குத் தந்துள்ள அந்த ஆணைக்கு (Mandate) அப்பால் சென்று செயற்பட எமக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, ஒப்பந்தத்தைத் திருத்துதல் என்ற விடயம் குறித்து செவிமடுக்கவே நாம் தயாரில்லை''.

- என்றார் பாலசிங்கம்.

இதேசமயம், நாளைமறுதினம் ஜெனீவாப் பேச்சு ஆரம்பிக்க முன்னர் சர்வதேச இராஜதந்திரிகள் சிலரை புலிகளின் பேச்சுக் குழுவினரைச் சந்திக்க வைத்து, அவர்கள் மூலம் ஒப்பந்த மீளாய்வுக்குப் புலிகளின் பிரதிநிதி களை இணங்கச் செய்ய வைக்கும் அழுத்தத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசுத் தரப்புக்கு ஆதரவான சில சக்திகள் செய்து வருவதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ-3)

# அரச ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள மேற்படி தொழிற்சங்கக்குழு, இந்த விடயத்தை வலியுறுத்தி எதிர்வரும் புதன்கிழமை கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாகவும் கூறியிருக்கிறது.

2006 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சுற்று நிருபத்தின்படி மேற்கொள்ளப்பட்டிருக்கும் சம்பள அதிகரிப்பினால் அரச சேவையில் குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறும் அரச துறை சம்பள மீளாய்வு தொழிற்சங்கக்குழு, இது விடயத்தில் ஜனாதிபதி உடனடிக் கவனத்தை செலுத்தாத பட்சத்தில் தொடர் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை நடத்த வேண்டிவரும் என்றும் எச்சரித்துள்ளது. (க-3)

# முஸ்லிம் தனித்தரப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடனும் அரசுடனும் உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகப்பற்றற்ற முறையிலும் பேசுவேன்.

- இவ்வாறு கூறினார் ஜெனீவாப் பேச்சில் அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் அமைச்சர் பேரியல் அஷ்ரப்.

நேற்றுக்காலை 10 மணியளவில் முஸ்லிம் நிறுவனங்களினதும் இயக்கங்களினதும் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸிலின் பிரதிநிதிகள் பேரியல் அஷ்ரப்பைச் சந்தித்து உரையாடினர்.

முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் சென்ற கவுன்ஸிலின் பிரதிநிதிகள் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் இடம்பெறுகின்ற அடுத்தகட்டப் பேச்சிலாவது முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துமாறு அமைச்சர் பேரியலிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதற்குப் பதிலளிக்கு முகமாகவே பேரியல் மேற்கண்டவாறு கூறினார்.

அதேவேளை, முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகள் அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவையும் சந்தித்து உரையாடினர். அவரிடமும் இதே வேண்டுகோளை விடுத்தனர்.

பேச்சில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை பேரியல் எடுத்துரைக்கும் வண்ணம் அவருக்கு நேரம் ஒதுக்கிக்கொடுக்கப்படும் எனவும், முஸ்லிம் தனித்தரப்புப் பற்றிய விடயம் கருத்திற்கொள்ளப்படும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

அடுத்தகட்டப் பேச்சிலாவது முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் வெள்ளிக்கிழமை கொழும்பு மருதானை வை.எம். எம். ஏயில் இடம்பெற்ற முஸ்லிம் இயக்கங்களின் அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (க-3)


## மரண அறிவித்தல்

### திருமதி சிறிகாந்தா தவமணி (தவம்)

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிகாந்தா தவமணி நேற்று (19.02.2006) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாதாள வைரவர் கோயிலடி,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(சி-47969)

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### கணக்கீடு

D.SAM - யாழ்ப்பாணம்..

*அறிவுறுத்தல் :*

❖ பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடைகள் எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் 01 புள்ளியைக் கொண்டதாகும்.
❖ பகுதி I, பகுதி II ஆகிய இரண்டுக்கும் விடையெழுதிய பின்பு இரு தொகுதி விடைத்தாள்களையும் ஒன்றாக இணைத்துக் கையளிக்கவும்.

❖ 01 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான பெட்டியில் "√" என அடையாளமிடுக.

உ - ம் : [√]

## கணக்கீடு I

1. நிதிச் செலவுகளை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க :
   - (1) வாடகை/சம்பளம்/விளம்பரம்/கடன்வட்டி
   - (2) வங்கிக் கடன் வட்டி/ஈட்டுக்கடன்வட்டி/வங்கி மேலதிகப்பற்று வட்டி
   - (3) வாடகை/சம்பளம்/மின்சாரம்/கடன்வட்டி
   - (4) போக்குவரத்து/அறவிடமுடியாக் கடன்/விளம்பரம்/தரகு
   - (5) போக்குவரத்து/அறவிடமுடியாக்கடன்/விளம்பரம்/வங்கி மேலதிகப் பற்று வட்டி

2. தேறிய நட்டத்தின் பொருள் :
   - (1) வருமானத்திலும் விற்பனையிலும் கூடிய செலவு
   - (2) செலவு - மொத்தலாபம்
   - (3) மொத்தலாபம் + செலவுகள்
   - (4) மொத்தலாபத்திலும் கூடிய செலவுகள்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

3. பின்வருவனவற்றுள் எது நடைமுறை அல்லாச் சொத்தாகும் :
   - (1) காசு
   - (2) கடன்பட்டோர்
   - (3) வருமதியுண்டியல்
   - (4) காணிகட்டடம்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

4. பின்வருவனவற்றுள் கூற்று வகையானது அல்ல :
   - (1) வியாபாரக் கணக்கு
   - (2) ஐந்தொகை
   - (3) பரீட்சைமீதி
   - (4) ஆரம்ப நிலவரக் கூற்று
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

5. பொதுவான இருநிரல் காசேடு :
   - (1) கடன் விற்பனை, காசு
   - (2) காசு, வங்கி
   - (3) கழிவு, காசு
   - (4) கழிவு, வங்கி
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

6. அசாதாரண விடயம் :
   - (1) அன்பளிப்பு
   - (2) நன்கொடை
   - (3) நிலையான சொத்து விற்பனை
   - (4) பூமியதிர்ச்சி நட்டம்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

7. பரீட்சைமீதி ஓர் :
   - (1) கணக்கு
   - (2) பேரேடு
   - (3) கூற்று
   - (4) பட்டியல்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

8. மூலதனம் :
   - (1) உரிமையாளர் நிறுவனத்தின் மேலுள்ள விருப்பம்
   - (2) உரிமையாளர் வீட்டின் மேலுள்ள விருப்பம்
   - (3) உரிமையாளர் சொந்தத் தேவைக்கு எடுப்பது
   - (4) உரிமையாளர் நிறுவனத்தில் இடுவது
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

9. 10. 05. 2005ஆம் திகதி ரூபா 25 000 காசோலை வழங்கிய பின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 151 500. இக்காசோலைக்கு வங்கி பணம் கொடுக்க மறுத்து விட்டது. இப்போது வங்கியில் இருக்கும் தொகை :
   - (1) ரூபா 151 500
   - (2) ரூபா 176 500
   - (3) ரூபா 126 500
   - (4) ரூபா 201 500
   - (5) ரூபா 57 890

10. கடன்பட்டோன் ஒருவன் உமது வங்கிக் கணக்கில் பணம் கட்டியதை நிரூபிக்கும் சான்று :
   - (1) வங்கிக் கூற்று
   - (2) வங்கிக் கணக்குச் செலவுப் பதிவு
   - (3) கட்டுத் துண்டின் அடிக்கட்டை
   - (4) கடன்பட்டோன் கடிதம்
   - (5) வரவுத் துண்டு

11. தளபாடத் திருத்தம் :
   - (1) மூலதனச் செலவு
   - (2) வருமானச் செலவு
   - (3) பிற்போட்ட வருமானச் செலவு
   - (4) எச் செலவெனக் கூற முடியாது
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

12. செம்மையாக்கல் அனைத்திற்கும் :
   - (1) ஒரு பதிவே உண்டு
   - (2) இரண்டு பதிவு உண்டு
   - (3) மூன்று பதிவு உண்டு
   - (4) நான்கு பதிவு உண்டு
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

13. பரீட்சை மீதி சமப்பட்டால் :
   - (1) கணக்குகள் அனைத்தும் சரி
   - (2) பிழை எதுவுமில்லை
   - (3) எண்கணித ரீதியான பிழையெதுவுமில்லை
   - (4) அனைத்தும் முடிந்துவிட்டது
   - (5) மேற்கூறிய எதுவுமில்லை

14. ஆக்கவுரிமை :
   - (1) கற்பனைச் சொத்து
   - (2) அருவச் சொத்து
   - (3) உருவச் சொத்து
   - (4) [illegible]
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

15. ஆரம்பப் பதிவேடுகளில் அல்லது பேரேட்டுக் கணக்குகளில் உண்மைப் பெறுமதியையும்விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பதியப்பட்ட பெறுமதியை :
   - (1) விடுபடு வழுக்கள் (Error of Omission)
   - (2) செய்யப்படு வழுக்கள் (Error of Commission)
   - (3) ஈடுகட்டும் வழு (Compansating Error)
   - (4) கொள்கை வழுக்கள் (Error of Principles)
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

16. கணக்கீட்டு வட்டம் (Accounting Cycle) :
   - (1) கொடுக்கல் வாங்கல்களை நாளேட்டில் இடமுன் பதிவுசெய்தல்.
   - (2) நாளேட்டில் இட்டபின் பரீட்சைமீதி செய்தல்.
   - (3) பரீட்சைமீதியில் வரும் பகிரப்படாத இலாபம் அத்திகதிவரை காட்டப்படாமை.
   - (4) நாளேட்டிலுள்ள அனைத்தும் அந்தந்த பேரேட்டுக் கணக்குகளில் பதியப்படல்.
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

17. ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை :
   - (1) ஊழியர் வேதனத்தில் செலுத்துகிறார்கள்
   - (2) தொழிலளிப்போர் ஊழியரின் சம்பளத் தொகைக்கேற்பச் செலுத்துகிறார்கள்.
   - (3) ஊழியர் குறித்த பங்கும் தொழிலளிப்போர் குறித்த பங்கும் செலுத்துகிறார்கள்.
   - (4) ஊழியர் இரு பங்கும் தொழிலளிப்போர் ஒரு பங்கும் செலுத்துகிறார்கள்.
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

18. ஒரு நிறுவனம் இயந்திரமொன்றை ரூபா 3 200 இற்கு வாங்கியது. இது குறைந்து செல்மீதி முறையில் 25% தேய்விடப்படவேண்டும். இரண்டு வருடத்தின் பின் இதன் புத்தகப் பெறுமதி :
   - (1) ரூபா 1 600
   - (2) ரூபா 2 400
   - (3) ரூபா 1 800
   - (4) ரூபா 12 000
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

19. பின்வரும் சமன்பாடுகளுள் பொருத்தமற்றது :
   - (1) ஆரம்ப மீதி + பெற்ற பணம் = கொடுத்த பணம் + இறுதி மீதி
   - (2) கொடுத்த பணம் + இறுதி மீதி + பெற்ற பணம் = ஆரம்ப மீதி + பெற்ற பணம்
   - (3) இறுதி மீதி + பெற்ற பணம் = ஆரம்ப மீதி + கொடுத்த பணம்
   - (4) இறுதி மீதி + கொடுத்த பணம் = பெற்ற பணம் + ஆரம்பமீதி
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

20. ஒரு கழகத்தில் ஒவ்வொருவரும் சந்தாவாக ரூபா 20 செலுத்தும் 50 பேர் இருக்கின்றனர். ஆண்டுத் தொடக்கத்தில் 5 பேர் முற்பணமாகத் தமது சந்தாவைச் செலுத்தியிருக்க, 4 பேர் சந்தாவைச் செலுத்தாது இருந்தனர். வருட இறுதியில் 2 பேர் முற்பணமாகத் தமது சந்தாவைச் செலுத்தியிருக்க, 3 பேர் சந்தாவைச் செலுத்தாது இருந்தனர். வருட சந்தா வருமானம் :
   - (1) ரூபா 960
   - (2) ரூபா 1 000
   - (3) ரூபா 1 020
   - (4) ரூபா 1 040
   - (5) ரூபா 1090

❖ **21தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் தொடர்பில் பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.**

21. கொள்ளல் கொடுத்தல் கணக்கின் இறுதி வரவு மீதி ............ இருப்பைக் குறிக்கும்.
22. குறித்த திட்டவட்டமான உடன்பாடு காணப்படாதவிடத்து, பங்காளர் பங்குடமைக்கு வழங்கிய கடனுக்கான வட்டி ............. வீதம் ஆகும்.
23. ஐந்தொகை ............................. தயாரிக்க முடியும்.
24. இறுதி மூலதனம் = ஆரம்ப மூலதனம் + ......................... + ..................... பற்று
25. நிறுவனப் பாவனைக்கு வாங்கிய மோட்டார் .................. சொத்தாகவும், விற்பதற்கு வாங்கிய மோட்டார் ......................... கருதப்படும்.
26. வரையறுத்த பங்காளரின் நட்டப்பொறுப்பு ......................... காணப்படும்.
27. வருமானத்திலும் அதிகமான செலவு குறிப்பது ...................... ஆகும்.
28. குறிப்பிட்ட ஆண்டின் ................................ வருமானம் ஐந்தொகையில் திரண்ட நிதியின் கீழ் காட்டப்படும்.
29. நிறைவில் பதிவு கணக்கீட்டில் விரும்பத்தக்க ....................................
30. சொத்தின் ஏட்டுப்பெறுமதியைவிட விற்பனைவிலை அதிகமாக இருப்பின் அது ............................................ எனப்படும்.

❖ **31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் தொடர்பில் சரியானதா பிழையானதா எனக் காட்டுக.**

31. ஒரு பங்குடமையானது உடன்படிக்கையொன்று இன்றி இருக்க முடியாது. ( சரி / பிழை )
32. கட்டட விஸ்தரிப்பு மூலதனச் செலவல்ல. ( சரி / பிழை )
33. எதிர்காலத்தில் நிறுவனம் ரூபா 1 000 000 செலவில் கட்டடம் கட்ட ஒப்பந்தம் எழுதியுள்ளது. ஆனால் இதை வெளிப்படுத்தத் தவறுவதால் எண்ணக்கரு. மீறப்படும் ( சரி / பிழை )
34. ஏற்பாடுகள் தேறிய இலாபத்தைக் குறைக்கும். ( சரி / பிழை )
35. கழிவு சம்பளப்பட்டியலில் பதியப்படாத ஒரு நடவடிக்கையாகும். ( சரி / பிழை )

❖ **36தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் தொடர்பில் ஆம் அல்லது இல்லை என விடைதருக.**

36. A யும் B யும் பங்குடமையொன்றை நடத்துகின்றனர். C இப்பங் குடமையில் புதிய பங்காளரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். A யிற்கும் B யிற்கும் இடையிலான பங்குடமை கலைக்கப்பட வேண்டுமா? (ஆம் / இல்லை)
37. பங்காளர் விலகும்போது கட்டாயமாக அனைத்துச் சொத்துக்களும் மறுமதிப்பீடு செய்ய வேண்டுமா? (ஆம் / இல்லை)
38. சுனாமி அழிவு நட்டம் ஓர் அசாதாரண விடயமா? (ஆம் / இல்லை)
39. கொள்ளல் கொடுத்தற் கணக்கு காசுக் கணக்கிற்குச் சமனாகும். (ஆம் / இல்லை)
40. கணக்கீட்டுச் சமன்பாடு, சொத்து = மூலதனம் - பொறுப்பா? (ஆம் / இல்லை)

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு II

*அறிவுறுத்தல் :*
- *முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.*
- *ஒவ்வொரு விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.*
- *ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப்படல் வேண்டும்.*

1. (அ) (i) நித்தி, வித்தி, சத்தி என்பவர்கள் பங்குடமை ஒப்பந்தமின்றிச் செயற்படத் தொடங்கிய முதல் வருடத்தில் அவர்களுக்கிடையில் பின்வரும் விடயங்களில் குழப்பநிலை காணப்படுகிறது. அதற்காக உமது உதவியை நாடுகின்றனர். அவர்களுக்கு நீர் கூறும் தீர்வு முறைகளைக் குறிப்பிடுக.

(1) வித்தி தான் வழங்கிய கடனுக்கு 8% வட்டி வேண்டிநிற்கிறார். இதற்கு ஏனைய பங்காளர்கள் உடன்பட மறுக்கின்றார்கள்.

(2) நித்தி மொத்த மூலதனத்தில் ½ பங்கை இட்டுள்ளார். மற்றைய பங்காளர்கள் சமனான மூலதனமிட்டனர். நித்தி இலாப நட்டத்தை மூலதன விகிதத்திற்குப் பிரிக்குமாறு கூறுகிறார். இதற்கு ஏனைய பங்காளர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

(3) வியாபாரத்தின் முகாமையாளரான சத்தி வருடம் ரூபா 6 000 சம்பளம் கோருகின்றார். ஆனால் ஏனைய பங்காளர் இதற்குச் சம்மதிக்க மறுக்கின்றனர்.

(4) வியாபாரம் சம்மந்தமாக நித்தி செலுத்திய ரூபா 4 000 தொடர்பாக பங்காளரிடையே குழப்பம் காணப்படுகின்றது. (02 புள்ளிகள்)

(ii) ரங்கன், அப்புகாமி பங்குடமையின் 31 டிசெம்பர் 2004 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பற்று விபரம் வருமாறு:

ரங்கன் - ஒவ்வொரு இரண்டு மாதத் தொடக்கத்திலும் ரூபா 4 000 தைப் பற்றியுள்ளார்.
அப்புகாமி - ஜனவரி 15 இல் ரூபா 8 000
மார்ச் 31 இல் ரூபா 7 000
ஜூலை 1 இல் ரூபா 6 000
செப்ரெம்பர் 30 இல் ரூபா 4 000
நவம்பர் 1 இல் ரூபா 5 000

பற்றுவட்டி ஆண்டிற்கு 10% எனக் கொள்க.

*வேண்டப்படுவது:*
(1) ரங்கனின் பற்று வட்டி
(2) அப்புகாமியின் பற்று வட்டி (02 புள்ளிகள்)

(iii) கந்தா, நந்தா, வரதா பங்குடமையிலிருந்து கந்தா 31 டிசெம்பர் 2004 இல் விலகும்போது ரூபா 345 000தைக் கடனாக விட்டுச்செல்கின்றார். அவ்வருட தேறிய இலாபம் ரூபா 300 000 ஆகும்.

*வேண்டப்படுவது :*
(1) மேற்கூறப்பட்ட பங்குடமை தொடர்பில் பங்குடமைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடு.
(2) பங்குடமையிலிருந்து 2004 ஆம் ஆண்டிற்கு கந்தாவின் வருமானம். (02 புள்ளிகள்)

(iv) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.
(1) இலாப நட்டக் கணக்கு, பகிர் கணக்கு
(2) நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு (02 புள்ளிகள்)

(v) சலீம், கரன் என்னும் பங்காளர் இலாப நட்டங்களை முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிர்கின்றனர். 1ஜூலை 2005 இல் அமர 1/5 உடன் சேர்க்கப்படுகிறார். இவர் ரூபா 10000 முதலிடுகிறார். பின்வரும் தனித்தனியான நிலமைகளிற்கு தேவையான நாட்குறிப்புப் பதிவுகளை (காசு உட்பட) தருக.
(1)நன்மதிப்பு ரூபா 60 000 என மதிக்கப்பட்டு அமர அதைக் காசாகக் கொண்டுவர ஏனைய பங்காளர் அதை மீள எடுத்துக்கொள்ளல்
(2)(1) இல் கூறிய நன்மதிப்பு முழுவதையும் உருவாக்கிக்கொள்ளல். (02 புள்ளிகள்)

(ஆ) ரனிலும் சுனிலும் கடந்த சில வருடங்களாக பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மூலதன வட்டியானது 8% ஆக தாக்கல் செய்த பின் இவர்களின் இலாப நட்டம் சமமாகப் பகிரப்படும் 01 செப்ரெம்பர் 2005 இல் அவர்களது முகா மையாளரான தயா ஒரு பங்காளராக அனுமதிக்கப்படுகிறார். இவர் மூலதன வட்டியின் பின் 1/5 பங்கு இலாபம் பெறுவார். ரனிலும் சுனிலும் மிகுதிப் பங்கைச சமமாகப் பகிர உடன்பட்டனர். அத்துடன், தயாவின் இலாபப் பங்கு வருடம் ரூபா 12 000 இற்கு குறையமாட்டாதென ஏனைய இருவரும் உத்தரவாதமளித்தனர். தயா சேரும்போது மூலதனம் கொண்டுவர வேண்டுமென வற்புறுத்தப்படவில்லை. இருப்பினும் வருடாந்த இலாபத்தில் ரூபா 3 000ஆ. மொத்தம் ரூபா 15 000 வரும் வரை மூலதனக் கணக்கில் செலவு வைப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 01 செப்ரெம்பர் 2005 இல் நன்மதிப்பானது ரூபா 30 000ஆக கடந்த ஐந்தாண்டு இலாபங்களை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்பட்டது. தயா தனது நன் மதிப்புப் பங்கைக் காசாகக் கொடுக்கின்றார். நன்மதிப்புக் கணக்குப் புத்தகங்களில் உருவாக்கல் ஆகாது. காணியும் கட்டடமும் ரூபா 56 800 எனவும், உபகரணமும் வாகனங்களும் ரூபா 30 000 எனவும் மதிக்கப்பட்டது. தயா முன்பு முகாமையாள ராக கடமையாற்றியபோது அரை வருட மொத்தலாபத்தில் 5% உபகாரக் கொடுப் பனவிற்கு உடன்பாடு காணப்பட்டது. அத்துடன் அவர் பங்காளராக மாறியதும் சம்பளமும், உபகாரக் கொடுப்பனவும் நிறுத்தப்படும்.

தயாவின் அனுமதி தொடர்பாக எந்தவித சீராக்கமும் செய்யப்படவில்லை. அவர் நன்மதிப்பாக அறிமுகப்படுத்திய தொகை நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட் டுள்ளது. பங்காளர் பற்றுக்கும் நடைமுறைக் கணக்கிற்கும் வட்டி அறவிடப்படவோ வழங்கப்படவோ மாட்டாது. மொத்தலாபமும் விற்பனைச் செலவுகளும் வருடம்பூரா வும் ஒரே சீராக அமைந்தன.

2005 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின் பரீட்சை மீதி பின்வருவன வற்றிற்குப் பின்வருமாறு:

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| மூலதனக் கணக்கு - ரனில் | | 60 000 |
| - சுனில் | | 30 000 |
| நடைமுறைக் கணக்கு - ரனில் | 15 600 | |
| - சுனில் | 14 200 | |
| - தயா | | 3 600 |
| காணி கட்டடம் | 36 000 | |
| உபகரணமும் வாகனமும் | 42 000 | |
| கையிருப்பு | 18 400 | |
| மொத்தலாபம் | | 84 000 |
| வியாபாரச் செலவுகள் 30 000 | | |
| முகாமையாளர் சம்பளம் | 8 000 | |
| முகாமையாளர் உபகாரப்பணம் | 2 100 | |
| கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் | 9 700 | 6 200 |
| காப்புறுதி | 2 000 | |
| வங்கி மீதி | 5 800 | |
| | 183 800 | 183 800 |

*வேண்டப்படுவது:*
(1) 2005 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு, இலாப நட்டப் பகிர் கணக்கு.
(2) மேற்போந்த கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் காட்டும் பங்காளர் நடை முறைக் கணக்குகளும், மூலதனக் கணக்குகளும்.
(3) 2005 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு ரணில், சுனில், தயா ஆகி யோரின் ஐந்தொகை. (10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (அ) கீழ்வரும் நாட்குறிப்புப் பதிவுகள் விஜியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| (i) மின்சாரம் | 10 000 | |
| செலுத்தவேண்டிய மின்சாரம் | | 10 000 |
| (ஆண்டின்போது செலுத்தப்படவேண்டிய மின்சாரக் கட்டணம்) | | |
| (ii) அறவிடமுடியாக்கடன் செலவு | 9 000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 9 000 |
| (ஐயக்கடன் ஏற்பாடு) | | |
| (iii) பொறி | 250 000 | |
| கடன்கொடுத்தோர் | | 250 000 |
| (பொறிகளின் கடன் கொள்வனவு) | | |
| (iv) மோட்டார் வாகனம் | 1 000 000 | |
| மூலதனம் | | 1 000 000 |
| (உரிமையாளர் வாகனத்தை நிறுவனத்திற்கு வழங்கியது) | | |

மேற்படி ஒவ்வொரு நாட்குறிப்புப் பதிவினையும் தயாரித்ததில் பயன்படுத்தப்பட்ட மிகப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக் கருவை அல்லது தத்துவங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) (i) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் நோக்கம் யாது?
(ii) 31 மார்ச் 2005 இல் சரத் நிறுவனத்தின் பேரேட்டில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன:

| | ரூபா |
|---|---|
| காசுமீதி | 20 000 |
| வங்கி மீதி | 30 000 |
| கடன்பட்டோர் : சங்கரி | 3 000 |
| சங்கர் | 24 000 |
| கடன்கொடுத்தோர் : நித்தி | 3 600 |

ஏப்ரல் 2005 மாதத்தின்போது பின்வரும் நடவடிக்கைகள் நடந்தேறின,
(i) வழங்கப்பட்ட காசோலைகள் :

| காசோலை இலக்கம் | திகதி | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 5312 | 10.04.2005 | மின்பட்டியல் | 2 400 |
| 5313 | 15.04.2005 | கொள்வனவுகள் | 10 000 |
| 5314 | 25.04.2005 | நித்தி | 3 000 |

(ii) காசுப் பெறுவனவுகள் :

| பற்றுச்சீட்டு இலக்கம் | திகதி | விபரம் | கழிவு (ரூபா) | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 511 | 12.04.2005 | சங்கரி | 500 | 3 000 |
| 512 | 15.04.2005 | விற்பனை | | 5 000 |
| 513 | 20.04.2005 | நிலையான சொத்து விற்பனை | | 20 000 |

(iii) வழங்கப்பட்ட விற்பனை விலைப்பட்டியல் :

| இலக்கம் | திகதி | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 100 | 11.04.2005 | சங்கரி | 4 000 |
| 101 | 20.04.2005 | சங்கர் | 6 000 |

(iv) வழங்கப்பட்ட செலவுத்தாள் :

| இலக்கம் | திகதி | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 340 | 12.04.2005 | சங்கரி | 300 |
| 341 | 20.04.2005 | சங்கர் | 100 |

*வேண்டப்படுவது :*
(1) விற்பனை நாளேடு
(2) பொதுப் பேரேட்டில் வேண்டிய கணக்குகளும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கும் (06 புள்ளிகள்)(மொத்தம் 10 புள்ளிகள்)

3. (அ) பிறேம் நிறுவனத்தின் புத்தகங்களிலிருந்து பின்வரும் மீதிகள் 31 டிசெம்பர் 2004 இல் எடுக்கப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| கடன்பட்டோர் | 255 000 |
| ஐயக்கடன் ஏற்பாடு (செலவு மீதி) | 8 100 |

அந்நிறுவனம் ஒவ்வோர் காலாண்டின் கடன் விற்பனையில் 2% தை அறவிடமுடியாக் கடன் செலவாகப் பதிந்து, ஆண்டிறுதிக் கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டைச் சீராக்கும் நடைமுறையைக் கடைப்பிடிக்கிறது.

2005 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் நடந்தேறியது.
ஜனவரி 31 முறையே தனு, அரி ஆகியோரின் தொகைகளான ரூபா 900, ரூபா 3 400 ஆகியன அறவிடமுடியாதவையாக பதிவழிக்கப்பட்டன.
மார்ச் 31 கடன் விற்பனை ரூபா 120 000 இற்கு அறவிடமுடியாக்கடன் செலவு செய்யப்படல்.
மே 02 கடந்தகாலங்களில் அறவிட முடியாததாக பதிவழிக்கப்பட்ட வேணாட்டின் ரூபா 1 000 அவரது சகோதரரால் மீளச் செலுத்தப்பட்டது.
ஜூன் 15 முகுந்தனின் தொகை ரூபா 1 100 அறவிடமுடியாததாக பதிவழிக் கப்பட்டது.
ஜூன் 30 கடன் விற்பனை ரூபா 166 000 இற்கு அறவிடமுடியாக்கடன் செலவு செய்யப்படல்.
ஜூலை 14 முறையே ரமேஸ், பார்த்தி, பிரபா ஆகியோரின் தொகைகளான ரூபா 700, ரூபா 2 430, ரூபா 135 ஆகியன அறவிடமுடியாதவையாக பதிவழிக்கப்பட்டன.
செப்டெம்பர் 30 கடன் விற்பனை ரூபா 141 400 இற்கு அறவிடமுடியாக்கடன் செலவு செய்யப்படல்.
டிசெம்பர் 31 பின்வரும் கடன்பட்டோர் தகவல்களைக் கொண்டு அறவிடமுடியாக்கடன் செலவு பதிவதற்கு ஐயக்கடன் ஏற்பாடு சீராக்கப்பட வேண்டும்.

வயதுப் பகுப்பு

| மொத்த மீதி | 1 - 30 நாள் | 31 - 60 நாள் | 61 - 90 நாள் | 90 நாட்களுக்கு மேல் |
|---|---|---|---|---|
| ரூபா 287 600 | ரூபா 154 500 | ரூபா 86 000 | ரூபா 32 00 | ரூபா 15 100 |
| மதிப்பிடப்பட்ட அறவிடமுடியா வீதம் | 0.2% | 0.5% | 3.0% | 4.0% |

டிசெம்பர் 31 வருடமுடிவில் அறவிடமுடியாக்கடன் செலவு பதிவுகள் மூடப்படும்
வேண்டப்படுவது :
ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு.
(05 புள்ளிகள்)

இந்த வினாத்தாளின் தொடர்ச்சியும் விடைக்குறிப்புகளும் 27.02.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகும்.

## அன்பு மாணவர்களே!

கல்விச்சுடர் தொடர்பான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

**கல்விச் சுடர்,**
361, கஸ்தூரியார் வீதி,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org